www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 87 இதழ் 51 | 2025 மார்ச் 23 - மார்ச் 29 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை

# மக்கள் உணர்வுகளைப் பிரதிபலித்துள்ளது

### சில எதிர்பார்ப்புகளும் தொடர்கிறது

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை






**2025-26 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை மக்கள் உணர்வுகளை பிரதிபலித்துள்ளது சில எதிர்பார்ப்புகளும் தொடர்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு 14.03.2025 அன்று 2025–26 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வரும் மகளிர் உரிமைத் தொகை, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட சமூக நலத் திட்டங்களை விரிவுபடுத்தி, பரவலாக்குவதில் நிதிநிலை அறிக்கை கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது.

பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் கல்வி வசதிக்காக 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2000 வழங்கும் திட்டம் குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் தொன்மை மரபையும், இணையற்ற நாகரிக வாழ்வையும் எடுத்துக் கூறும் தொல்லியல் ஆய்வுகளுக்கும், அருங்காட்சியகங்கள் அமைக்கவும் முன்னுரிமை வழங்கியுள்ளது. பிறநாட்டு நல்லறிஞர்கள் “தெள்ளுற்ற தமிழமுதின் சுவை” ருசிக்க, தலைசிறந்த தமிழ் நூல்கள் பிறநாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியில் டைடல் பூங்காக்கள், தொழில் பேட்டைகள், தகவல் தொழில்நுட்ப வளாகங்கள் அமைப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. பெண் தொழில் முனைவோரை உருவாக்கும் திட்டம், பெண்களை அதிகாரப்படுத்தும் திசையில் புதிய கட்டத்துக்கு எடுத்துச் செல்லும். மூன்றாம் பாலினத்தவர்களை ஊர்க்காவல் படையில் தேர்வு செய்வது, அவர்களுக்குக் கண்ணியமான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளில் கவனம் செலுத்தி மெட்ரோ ரயில் திட்டம், விமான நிலைய விரிவாக்கம் போன்றவைகளில் கவனம் செலுத்தியுள்ளது. அதிக அன்னிய

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### நாகை நோக்கி - 2
**கட்சிக் கடிதம்**

எக்கொடியைக் கண்டும் மிரளாதவர்கள் எந்நிறம் கண்டும் கலங்காதவர்கள் சிவப்புக் கொடியைக் கண்டு மிரள்கின்றார்கள். அன்று முதல் இன்று வரை மிரள்வது யார்? வெள்ளை ஆட்சியர் மிரண்டனர், ஜமீன்தார்கள் மிரண்டனர், பெரும் நிலப்பிரபுக்கள் அரண்டனர் மடாதிபதிகள் மிரண்டனர்! ஏன்?

... பக்கம் 2

### ஆர்.பி.தத் (1896-1974) இந்தியாவின் உற்ற தோழர்
**ஆர்.பட்டாபிராமன்**

சுவிட்ஜர்லாந்தில் 1936 ல் நேருவை சந்தித்த ஆர்.பி.தத், காங்கிரஸ் இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சியை தோழமையாக பார்த்து வளர உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நேரு மார்க்சியத்தை ஆழமாக கற்றவராக தெரியவில்லை என்றாலும், அதன் மீது emotional attachment அவருக்கு இருப்பதாக தத் மதிப்பிட்டார்.

... பக்கம் 3

### நீயா நானா? தடை சரிதானா?
**த.லெனின்**



தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே தமிழ்நாட்டுக்கு நிதி தருவோம் என மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல மாறிவிட்டது.

... பக்கம் 5

### கடலையும் விட்டுவைக்காத கார்ப்பரேட்டுகள்
**வ.மணிமாறன்**

மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும், மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோள காப்பகத்துக்கும், அரிய வகை பவளப் பாறைகள், கடற்பசுக்கள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்களுக்கும் பேராபத்தை ஏற்படுத்தும் இந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

... பக்கம் 6

### இருமொழி இழப்பிலும் தள்ளவில்லை மும்மொழி முன்னேற்றமும் தரவில்லை
**மே.து.ரா.**

உலகின் பிற நாடுகளுடன் தொடர்பு என்பதற்கு மேலாக, மனித இனம் பெற்றுள்ள கண்டுபிடிப்புகளையும் முன்னேற்றங்களையும் அறிவுச் செல்வங்களையும் தெரிந்துகொள்ள ஏதாவதொரு மொழி வேண்டியுள்ளது. அத்தகையதொரு மேனிலையினை இதுவரை இந்தியோ அல்லது தமிழ் உள்ளிட்ட வேறோர் இந்திய மொழியோ பெறவில்லை என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டும்.

... பக்கம் 8

## தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பை ஏற்று,

# சி.பி.ஐ. கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் கடிதம்

**அன்புள்ள திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு**

வணக்கம்,

தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.பழனிவேல் தியாகராஜன் மற்றும் திரு.டாக்டர் சுமதி என்கிற தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் மூலம் அனுப்பப்பட்ட உங்கள் 1074/CMO/2025 என்கிற அழைப்பிதழ் கடிதம் எமக்குக் கிடைத்தது. அரசியல் ரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தில் உங்கள் முயற்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலக் குழு சார்பாக பாராட்டுகிறோம்.



■ தொகுதி மறு சீரமைப்பு சதிக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்த அழைப்பை, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி ஆகியோர் பினாய் விஸ்வத்திடம் வழங்கினர்.

நீங்கள் அழுத்தமாக விளக்கியுள்ளது போல், ஒன்றிய அரசின் நடவடிக்கை, மக்கள்தொகை கட்டுப்பாடு உள்ளிட்ட தேசியக் கொள்கைகளை உறுதியாக நிறைவேற்றும் நமது மாநிலங்களைத் தண்டிப்பதாகும். அவர்கள் விரும்பாத மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காக அரசியல் உள்நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் உத்தியாகும்.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தெற்கில் தெலுங்கானா மற்றும் கர்நாடகா, கிழக்கில் மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா மற்றும் வடக்கில் பஞ்சாப் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டு நடவடிக்கைக் குழுவை அமைக்க நீங்கள் முன்வைத்துள்ள கருத்து, ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்டது.

மார்ச் 22ம் தேதி சென்னையில் நடைபெறும் கூட்டத்தில், நமது வாதங்களின் மூலம் இதனை மேலும் உறுதிப்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்கதாக மாற இருக்கும், இந்தப் பயனுள்ள கூட்டத்தை எதிர்நோக்குகிறோம்.

**ஒற்றுமை மற்றும் உறுதியுடன்,**
**உங்கள் உண்மையுள்ள,**
**பினாய் விஸ்வம்**
**தேசியச் செயற்குழு உறுப்பினர் மற்றும் கேரள மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**

கட்சிக் கடிதம்

# நாகை நோக்கி - 2



போர்க்குணமிக்க தோழர்களே!

**1936ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நமது அகில இந்திய விவசாயிகள் சங்கத்திற்கு அனைவரும் சேர்ந்து சங்கக் கொடியினை உருவாக்கினார்கள்.**

அத்தகைய கொடி என்பது எதுவாக இருக்குமென ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம் இல்லை.

ஆம் செங்கொடிதான் சங்கத்தின் கொடி என ஒரு மனதாக முடிவு செய்தனர்.

அனைவராலும் ஏற்கப்பட்ட அம்மகத்தான செங்கொடி, ஒரு மாநிலத்தில், ஒரு மாவட்டத்தில் என்று சுருக்கிக் கொள்ளாமல் நாடு முழுவதும் பற்றிப் பரவியது. நாடெங்கும் பட்டொளி வீசிப் பறந்தது.

எக்கொடியைக் கண்டும் மிரளாதவர்கள் எந்நிறம் கண்டும் கலங்காதவர்கள் சிவப்புக் கொடியைக் கண்டு மிரள்கின்றார்கள். அன்று முதல் இன்று வரை மிரள்வது யார்?

ஏழை எளிய மக்களா? சிறு, குறு நடுத்தர விவசாயிகளா? விவசாயத் தொழிலாளர்களா? இல்லை! மாறாக வாராது வந்த மாமணியே, மாணிக்கமே வா வா என வரவேற்று மகிழ்கிறார்கள்.

வெள்ளை ஆட்சியர் மிரண்டனர், ஜமீன்தார்கள் மிரண்டனர், பெரும் பண்ணையார்கள்(நிலப்பிரபுக்கள்) அரண்டனர் மடாதிபதிகள் மிரண்டனர்! ஏன்?

இவர்களிடம்தான் நாட்டில் உள்ள நிலங்கள் எல்லாம் இருந்தன. நஞ்சை என்றாலும் அது புஞ்சை நிலமாயினும் அவர்களுக்கே சொந்தம்!

அரசு புறம்போக்கா? ஆற்றுப்படுக்கையா? மேய்ச்சல் புறம்போக்கா? குளத்துப் புறம்போக்கா? சாலைப் புறம்போக்கா? அவைகள் எவையாயினும் அவர்களுக்கே சொந்தம்! ஏன் சுடுகாடு கூட அவர்களுக்குத்தான் சொந்தம். நாடு முழுமைக்கும் இந்நிலையே!

இந்நிலையில் வாழும் மக்கள் எவராயினும் இவர்களுக்கு அடிமைகள்.

இவர்களில் முற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் பண்ணையார்களுக்கு மேனேஜராக, மணியக்காரராக, கணக்கு எழுதுபவராக, ஊர் கர்ணமாக, கிராம முனிசிப்பாக(பட்டாமணியார்) போன்ற பணிகளில் அமர்த்திக் கொள்வார்கள்.

இவர்கள் சிறு எண்ணிக்கைதான் என்றாலும் இவர்கள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலை.

மற்றவர்கள் குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன மக்கள் எனப் பெரும்பான்மையாக உள்ளனர்.

இவர்களில் சிறு, குறு விவசாயிகள் குத்தகை சாகுபடியாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள். இவர்களின் எண்ணிக்கை பெரிது! இவர்கள் அனைவரும் உழைப்பாளி மக்கள்தான்! ஐயமில்லை!

இவர்கள் தாங்கள் அனைவரும் உழைப்பாளி மக்கள், நம்மை ஆதிக்கக்காரர்கள் சுரண்டுகிறார்கள், அவர்களுக்கு ஆளும் வர்க்கம் சலாம் போடுகின்றது! இவர்களை ஒரு சேர ஒழித்துக் கட்ட நாம் ஒன்றிணைய வேண்டும்! அமைப்பாய் அணி திரள வேண்டும் என்ற சரியான நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் நந்தி போல் நின்று நகர மறுத்து தடுத்து நிறுத்துவது எது?

இன்னும் அது தொடர்கின்றது. அவ்வளவு சக்தி வாய்ந்தது எது? சகித்துக்கொள்ள முடியாத, அருவருக்கத்தக்க சாதிதான் அது.

அத்தகைய சாதியைப் பயன்படுத்தி உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தித் தங்களை நிலை நிறுத்திக் கொண்டார்கள் ஆதிக்க சக்திகள்.

ஆதிக்கக் கூட்டத்தின் சதிவலையில் இருந்து மக்களை விடுவிப்பது என்ன அவ்வளவு சுலபமான பணியா?

அவ்வளவு எளிதல்ல, கடினமான மிகக் கடினமான பணிகள்தான்.

அத்தகைய கடினமான பணிகளைத்தான் நம் முன்னோர்கள்







மேற்கொண்டார்கள்.

அவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்கள். சுயநலம் என்றால் அவர்களுக்கு என்னவென்று தெரியாது.

அவர்களின் இரு கண்களுக்கும் தெரிந்தது நாட்டின் விடுதலை. அத்தகைய விடுதலைக்காக நாட்டில் உள்ள மக்களை எல்லாம் அமைப்பாய் அணி திரட்ட வேண்டும்.

நகர்ப்புறங்களில் உள்ள தொழிலாளர்களை அணி திரட்ட வேண்டும். அவர்கள் மட்டும் போதுமா? கிராமப்புற விவசாயிகளை, பாட்டாளி வர்க்கத்தின் நம்பகமான தோழர் விவசாயத் தொழிலாளர்களை அணி திரட்ட வேண்டும்.

இத்தகைய பணிகள் குறித்துப் பேசுவதும் எழுதுவதும் அன்றும் சரி இன்றும் சரி சுலபமானது!

ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவது, செயல்படுத்துவது எங்கனம் என்றால் இப்பணியில் ஈடுபடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்களுக்கு இரு உழைப்புகள் தேவை!

ஒன்று மூளை உழைப்பு மற்றொன்று உடல் உழைப்பு! இவையிரண்டில் ஒன்று பழுதாயினும் பயனில்லை. இதனைத்தான் நம் எல்லோருக்கும் எளிதில் புரியும் படியாக, ''தத்துவமில்லா நடைமுறை குருட்டுத்தனமானது. நடைமுறையில்லாத் தத்துவம் மலட்டுத்தனமானது'' என மார்க்சியம் போதிக்கின்றது. இதனைச் செயல்படுத்திட நமது தலைவர்கள் தத்துவம் பயின்றார்கள். மார்க்சியம் எனும் மகத்தான, வெல்வதற்கரிய தத்துவத்தைக் கசடறக் கற்றுத் தேர்ந்தார்கள்.

தேர்ந்தது மட்டுமல்ல, அதனைச் செயல்படுத்த, மக்களிடம் செல்லுங்கள், மக்களிடம் கற்றுக் கொள்ளுங்கள் என மாமேதை லெனின் கூறியதை நமது மதிப்புமிக்க முன்னோர்கள் மேற்கொண்டார்கள்.

கிராமங்களை நோக்கி அவர்களின் பாதங்கள் அச்சமின்றி, நம்பிக்கையோடு நடைபோட்டது.

சாதியால் பிளவுபட்டு நின்ற அம்மக்களைச் சந்தித்தார்கள். ஒரு நாளா? இரு நாளா? ஒரு இரவா ஒரு பகலா?

இரவையும் பகலையும் ஒன்றாக்கினார்கள். பசி, பட்டினி குறித்துக் கவலைப்படவில்லை! கருமமே கண்ணாயினர்.

அவர்களிடத்தில் அமர்ந்து, அவர்கள் கூறியதை அலுப்பு, சலிப்பின்றிச் செவிமடுத்துக் கேட்டார்கள்.

தங்களின் துன்பங்களை, துயரங்களை அவர்களின் மொழியில் சொன்னார்கள். கேட்பவர்கள் அவர்கள் மொழியைக் கண்டு முகம் சுளிக்கவில்லை. மாறாக மதிப்பளித்தார்கள். இவர்கள் அளித்த மதிப்பு அவர்களுக்கு நம்பிக்கையூட்டியது. தலைவர்கள் பால் மதிப்பு ஏற்பட்டது.

தலைவர்கள் அம்மக்கள் மொழியில் உன் துன்பம் துயரம் சுரண்டல், அடக்குமுறை அனைத்தையும் எதிர்கொள்ள உங்களிடம் மகத்தான சக்தி இருக்கின்றது. அச்சக்தியை அறியா காரணத்தால் அல்லல்படுகின்றீர்கள். அச்சக்தியைப் பெற நீங்கள் ஒன்றுபட வேண்டும். உழைப்பாளி மக்கள் என்கிற முறையில், சுரண்டப்படும் மக்கள் என்கிற முறையில், அடக்குமுறைக்கு ஆளானவர்கள் என்ற முறையில் ஒன்று படுங்கள், ஓர் அணியாகத் திரளுங்கள், அமைப்பாகத் திரளுங்கள். சங்கம் காணுங்கள். 'தங்கம் சாதிக்காததைச் சங்கம் சாதிக்கும்' என்கிற தத்துவத்தை எளிய முறையில் எடுத்துரைத்தார்கள்.

அம்மக்களுக்குப் புதியதோர் வெளிச்சம் கிடைத்தது, புதிய பாதை தெரிந்தது.

ஊர்தோறும் சங்கம் உருவானது. கிராமங்கள் தோறும் காவல் தெய்வமாக செங்கொடி பறந்தது.

இவ்வாறு அணு அணுவாக உருவான சங்கம், மாபெரும் சங்கமாக உருவெடுத்தது.

அவ்வாறு முடிவெடுத்தது ஆலமரமாக விழுது விட்டு அடர்ந்து, படர்ந்து இருக்கும் மாபெரும் இயக்கமான **அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் மகத்தான மாநாடு தேசிய 30வது மாநாடு நாகை நகரில் கோலாகலமாக ஏப்ரல் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்களில் நடைபெறவுள்ளது.**

மாநாட்டின் நிறைவு நாளான ஏப்ரல் 17ஆம் நாள் மகத்தான பேரணி மாபெரும் பேரணி, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பங்குபெறும் பேரணி பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இம்மகத்தான மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட நாகை நகரில் கடந்த 6.3.2025 அன்று வரவேற்புக் குழு அமைப்பதற்கான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை, தஞ்சை தெற்கு, தஞ்சை வடக்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த தோழர்கள் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில நிர்வாகிகள் என மிகுந்த ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் கலந்து கொண்டு நல்ல பல கருத்துகளை எடுத்துக் கூறி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட 151 தோழர்களைக் கொண்ட வரவேற்புக் குழு அமைத்து, நிர்வாகிகளையும் தேர்வு செய்துள்ளனர்.

மாநாட்டுப் பணிகள் தொடங்கி விட்டன. சுவர் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மற்றவை அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## பிழை திருத்தம்

சென்ற இதழில் அகில இந்திய விவசாயிகள் சங்க தேசிய மாநாடு ஆகஸ்ட் 15,16,17 ஆகிய தேதிகளில் நடப்பதாக பிழையாக அச்சாகியுள்ளது. ஆகஸ்ட் மாதம் என்பதை, ஏப்ரல் மாதம் என திருத்திக் கொள்ளவும்.

– ஆசிரியர் ஜனசக்தி

# ஆர்.பி.தத் (1896-1974) இந்தியாவின் உற்ற தோழர்

**ரஜனி பாமி தத் என்கிற பெயர் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றுடன் கலந்து போன பெயர். குறிப்பாக விடுதலைக்கு முன்னரான கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் பெரும் பாத்திரமாக இருந்த பெயர்.**

லண்டன் ஓரப்பகுதி கிராமம் ஒன்றில் அக்கால நம்மூர் 'ஒரு ரூபா' டாக்டர் போல, ஏழைகளின் மருத்துவராக இருந்தவர் உபேந்திர கிருஷ்ண தத். அவர் ஸ்வீடிஷ் பெண் 'அன்னா பாமியை' மணந்து கொண்டார். கிளமன்ஸ் பாமி தத், ரஜனி பாமி தத் என்கிற அவர்களது இரு மகன்களும் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தாலும், கம்யூனிஸ்ட்களாலும் மறக்க முடியா மனிதர்களாயினர்.

ரஜனி என்றால் இரவில் பிறந்தவன் எனப் பொருள். அம்மாவின் பாமி, அப்பாவின் தத் சேர்ந்து அவர் ரஜனி பாமி தத் ஆனார். இந்தியாவில் ஆர் பி தத் என அறியப்படலானார். தோழர்களால் ரஜி என அழைக்கப்பட்டார்.

கல்லூரி காலத்திலேயே, சோவியத் தாக்கத்தால் அவர்கள் புரட்சிகர இயக்கம் நோக்கி சாய்ந்தனர். கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் நாயக இளைஞர்களாகவும் வளர்ந்தனர். ஆர் பி தத் 'லேபர் மன்த்லி' தொடங்கி 53 ஆண்டுகள் அதன் எடிட்டராக ஏராளம் எழுதி குவித்தார். சிபிஜிபி என்கிற கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழுவில் செயல்பட்டார்.

ஷாபுர்ஜி சக்லத்வாலா, எமிலி பர்ன்ஸ், ஹாரி பொலிட் போன்றவர்கள் கூட்டாளிகள். சக்லத்வாலாவும் தத்தும் ஒருவரையொருவர் நேசித்த தோழர்கள். 1922ல் வெளியான எம்.என்.ராயின் India in Transition, 1926ல் வெளியான தத்தின் Modern India இரண்டும் அப்போதைய அறிவுசார் இளம் கம்யூனிஸ்ட்களுக்கு பொக்கிஷங்களாயின. இந்தியா குறித்த மார்க்சிய ஆய்வு நூல்களாக அவை பார்க்கப்பட்டன.

பிரிட்டிஷ் கட்சியில் அப்போதிருந்த இளம் தோழர்களில் சிலர் சார்லஸ் அசிலே, ஜார்ஜ் அலிசன், பென் பிராட்லி, பிலிப் ஸ்ப்ராட் போன்றோர் இந்தியா வந்தனர். இங்கிருந்த இளம் குழு தோழர்களுடன் ஸ்ப்ராட் தொடர்பு கொண்டு மீரத் சதி வழக்கில் சிறைக் கொடுமையையும் அனுபவித்தார். சிங்காரவேலர் பேத்தியையும் மணந்து, இந்தியாவிலேயே வாழ்ந்து மறைந்தார். அது தனி வரலாறு.

இங்கிலாந்திற்கு படிக்கப்போன ஏராள இந்திய இளைஞர்கள் மார்க்சியம் பக்கம் திரும்பினர். ஆர்.பி.தத்திற்கும் இதில் பெரும் பங்குண்டு. அவர்களில் பலர் பெரும் பொறுப்புகளில் பின்னர் அமர்ந்தனர். அவர்களில் சிலர் டி.ஆர்.காட்கில், எஸ்.சி. சர்கார், ஜோதிபாசு, ஹக்சர், மோகன் குமார மங்கலம், இந்திரஜித் குப்தா, புபேஷ் குப்தா, என்.கே.கிருஷ்ணன், பெரோஸ் காந்தி, நிகில் சக்கரவர்த்தி, ரேணுகா, ஹஜ்ரா பேகம், டாக்டர் அகமது, தேவி பிரசாத் சட்டோ, திலிப் போஸ், ஜகதீஷ் குப்தா எனச் சொல்லலாம்.

அப்போதெல்லாம் கோமிண்டர்ன் (மூன்றாவது அகிலம்) என்ன எழுதி அனுப்புகிறதோ அதுதான், அனைத்து கம்யூனிஸ்ட்களுக்கும் பாடத்திட்டம். வேறு பிரதியை நினைத்துக்கூட பார்க்க முடியாது. மெத்த படித்த இந்த அனைத்து இளைஞர்களும், சோவியத் மகுடியில் முழுமையாக மனதை கொடுத்தனர். முளைவிட்ட இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும், ஸ்டாலின் பேசிய அறிக்கைகளும், கோமிண்டர்ன் அறிக்கைகளும் தான் road map.

எம் என் ராயின் தாக்கம் நீங்கிய நிலையில், பிரிட்டிஷ் தோழர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு கூடியது. தத் முக்கிய வழிகாட்டியாக வரலானார். ஹிட்லரின் பாசிசத் தன்மை உணரப்பட்ட நிலையில், கோமிண்டர்ன் டிமிட்ராவ் அறிக்கை வழியே, ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களில் அய்க்கிய முன்னணி என்கிற கோட்பாட்டை முன்னெடுத்தது. இந்தியாவிலும் காங்கிரசுடன் இணைந்து என்கிற அறிவுரையை டிமிட்ராவ் முன் வைத்தார். இதற்கு முன்னால் இருந்த, காந்தி காங்கிரஸ் குறித்த விமர்சன பார்வையில் கொஞ்சம் தணிவு ஏற்படலானது. தத்தும் பிற கம்யூனிஸ்ட்களைப் போலவே காந்தியை 'ரீ ஆக்ஷனரி ' எனத்தான் எழுதி வந்தார்.

ஆறாவது கோமிண்டர்ன் வழிகாட்டல், மிக மோசமான இடது குறுங்குழு வாதம் நோக்கியே, இந்தியாவில் கம்யூனிஸ்ட்களை அழைத்துச் சென்றது. தத் அக்கூட்டத்திற்கு செல்லாவிடினும், அவர் இந்த செக்டேரியன் நிலைப்பாட்டை மிக அதிகம் உயர்த்திப்பிடித்தவர் என பார்க்கப்பட்டார். ஸ்டாலினின் ஊதுகுழல் எனப் பெயர் எடுக்கும் அளவு அவரது எழுத்துக்கள் சென்றன. இந்த தாக்கம் இந்திய கம்யூனிஸ்ட்கள் மீதும் பரவியது. காந்தியும் காங்கிரசும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாயினர். இந்திய தல நிலைமை குறித்த அறியாத்தனத்தால் விமர்சிக்கப்பட்டு வந்த காலமிது.

1936ல் இன்றும் கட்சி வட்டாரத்தில் புகழ் வாய்ந்த சொற்றொடராக இருக்கும் Dutt- Bradley thesis வெளியானது. ஆர்.பி.தத் மற்றும் பென் பிராட்லி பெயரில் வந்த ஆவணப்படி, காங்கிரசுடன் சேர்ந்து உள்ளிருந்து வேலை செய்வது என்ற திசை பின்னர் உருவானது. இளம் பி.சி.ஜோஷி பொதுச் செயலராகி, இதை முன்னெடுக்கலானார்.

இந்த சூழலிலும் வங்கத் தோழர்கள் தங்கள் செக்டேரியன் பாதையை விடாமல் league against Gandhism- fight the reactionary and bourgeois ideology of Gandhism' என்று இயங்கியதாக சோம்நாத் லாகிரி நினைவு கூர்ந்துள்ளார். சோம்நாத் லாகிரி மட்டுமே ஓராண்டு அரசியல் அமைப்பு அவையில் கம்யூனிஸ்ட்கள் சார்பில் இருந்தவர்.

மாஸ்கோ சென்ற கிளமன்ஸ் தத், ஹாரி பொலிட், பென் பிராட்லி அங்கே வந்திருந்த அன்றைய காங்கிரஸ் சோசலிஸ்ட் தலைவர் மினு மசானியை சந்தித்து CSP-CPI இடது கட்சிகளின் நெருக்கம் குறித்து, அணி குறித்து உரையாடினர். கிளமன்ஸை, ரஜனி தத் என மசானி அப்போது தவறாக புரிந்து கொண்டார். கம்யூனிஸ்ட்களிடம் அவநம்பிக்கை வைத்திருந்த மினு மசானி இரு நிபந்தனைகளை விதித்தார். சி.பி.ஐ யை கலைத்துவிட்டு காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேரவேண்டும். கோமிண்டர்ன் இணைப்போ, உத்தரவுகளோ கூடாது என்பன நிபந்தனைகள். இது நடைபெறாது என அவர் அறிவார்.

இந்தியாவில் ஆங்காங்கே காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள் கம்யூனிஸ்ட் தோழர்கள் இயங்கத்தொடங்கினர். நம்பூதிரிபாத், ராமமூர்த்தி, ஜீவா போன்றோரை இப்படி சொல்லமுடியும்.

காங்கிரசில் மாறுபட்டு 'பார்வேர்ட் கட்சியை' தொடங்கிய நேதாஜி left consolidation platform ஒன்றை உருவாக்கினார். எம் என் ராய், ஜேபி, நரேந்திரதேவ், பி சி ஜோஷி, நேதாஜி என பெரும் குழாம் சிறிது காலம் சேர்ந்தும், பின் ஒருவரை ஒருவர் நம்பாமல் செயல்பட்டு, ஒற்றுமையை குலைத்துக்கொண்டனர்.

சுவிட்ஜர்லாந்தில் 1936 ல் நேருவை சந்தித்த ஆர் பி தத், காங்கிரஸ் இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சியை தோழமையாக பார்த்து வளர உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நேரு மார்க்சியத்தை ஆழமாக கற்றவராக தெரியவில்லை என்றாலும், அதன் மீது emotional attachment அவருக்கு இருப்பதாக தத் மதிப்பிட்டார். நேரு மீது தத்தின் தாக்கம் இருந்ததை, அவர் இந்தியா திரும்பிய உரைகள் காட்டின என்கிற பேச்சு இருந்தது. சிபிஅய் மத்திய கமிட்டி ஜூலை 1936 அறிக்கையில், காங்கிரஸ் மேடையிலிருந்து கணிரென ஒலித்த நேருவின் ஏகாதிபத்திய



எதிர்ப்புக் குரல் என இதனை பதிவிட்டது.

லக்னோ காங்கிரசில் நேருவின் தலைமையுரையை 12 பக்க அளவில் முழுமையாக தத் 'லேபர் மந்த்லியில்' வெளியிட்டார்.

அதேபோல் நேதாஜியிடமும் சிறிய அளவு செல்வாக்கை தத்தால் உருவாக்க முடிந்தது. வியன்னாவில் இருந்து The Indian Struggle நூலை எழுதிய நேதாஜியிடம் கம்யூனிஸ்ட்கள் மீது கடும் விமர்சனம் இருந்தது. அவர்கள் தேசியத்திற்கு விரோதமானவர்கள், நாத்திகர்கள், மத விரோதிகள் என நேதாஜி விமர்சித்து வந்தார். நேரு கூட இந்த 'கம்யூனிச பாச வலையில்' இருக்கிறார் எனக் கூட பேசினார். லண்டனில் 1938ல் நேதாஜி இருந்தபோது, தத் அவரை சந்தித்து உரையாடினார். தத் தலைமையில் நேதாஜி பேசுகிற கூட்டங்கள் அமைக்கப்பட்டன.

அதற்கு பின்னர் டெய்லி ஒர்க்கர் பத்திரிகை பேட்டியில், நேதாஜி விடுதலை இந்தியா சோசலிச பாதையையே தேர்ந்தெடுக்கும் என்றார். இந்த தாக்கத்தை அவர், காங்கிரசிலிருந்து வெளியேறி இடது மேடை ஒன்றை அமைக்கும்வரை இருந்ததைக் காண்கிறோம்.

1940ல் ஆர்.பி.தத் எழுதிய India Today பெரும் புகழை ஈட்டிய புத்தகமாக இன்றுவரை இந்திய கம்யூனிஸ்ட்களால் உணரப்படுகிறது. அப்புத்தகம் இந்தியாவில் தடை செய்யப்பட்டு, இரகசியமாக பெறப்பட்டு படிக்கப்பட்டது. இந்தியா குறித்த மேம்பட்ட மார்க்சிய புரிதலாக அது பாவிக்கப்பட்டது.

1939ல் இரண்டாம் உலகப்போரை 'ஏகாதிபத்திய யுத்தம் நாடுகளை பங்குபோட வளங்களை கொள்ளையாக்கிட போர்' என்றுதான் இந்திய கம்யூனிஸ்ட்களும் பார்த்தனர். சோவியத் யூனியன் போரில் இங்கிலாந்து அமெரிக்க அணியில் இறங்கியவுடன், பாசிசத்திற்கு எதிரான 'மக்கள் யுத்தம்' என்ற நிலையை எடுத்தனர்.

கட்சி தடை காலத்தில், தலைவர்கள் சிறைக் காலத்தில், கூடி விவாதித்து முடிவு என்பது பிரச்சனையாக இருந்தது. தத் 'மக்கள் யுத்தம்' என எழுதிய கட்டுரைகள் உடனடியாக இங்கு தாக்கத்தை உருவாக்கவில்லை. ஆறுமாதம் ஏதோவொரு வகையில் முடிந்த விவாதங்களை மேற்கொண்டு, மக்கள் யுத்தம் பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் வந்தனர். குவிட் இந்தியாவிலும் 1942ல் பங்கேற்கவில்லை என்ற விமர்சனத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட்கள் உள்ளாயினர். ராஜாஜி, அம்பேத்கர், பெரியார், இந்து மகா சபா உட்பட எவரும் குவிட் இந்தியாவை ஆதரிக்கவில்லை குவிட் இந்தியாவிற்கு எதிராகவே நின்றனர். ஆனாலும் விமர்சனக் கணைகள் கம்யூனிஸ்ட்கள் மீதே அதிகம் விழுந்தன.

பாகிஸ்தான் தீர்மானத்தை முஸ்லீம் லீக் 1940ல் நிறைவேற்றியது. தொடர்ந்த ஆண்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட்களும், சுயநிர்ணய உரிமை பார்வையில் இத்தீர்மானத்திற்கு ஆதரவு நிலை எடுத்தனர். புகழ் வாய்ந்த 'அதிகாரி தீசிஸ்' அறிந்தவர் இதை உணர்வர். 1946ல் ரஜனி பாமி தத் இந்த நிலை ஏற்புடையதல்ல என எழுதலானார்.

1946ல் இந்திய கம்யூனிஸ்ட்கள் '17 அரசியல் அசெம்பிளிகள்' என தீர்மானித்தனர். லண்டனில் இருந்த டாங்கேவிற்கும் தந்தி அனுப்பப்பட்டு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இப்படி ஒரு தீர்மானத்தை கொணரக் கோரினர். தோழர் டாங்கே தந்தியை தோழர் தத்திடம் காட்டினார். தத் 'மய்யப்பட்ட ஒரே அரசியல் நிர்ணய சபை தான் ' தீர்வாக இருக்கும். 17 என்று கோரினால் இந்தியா என்ற ஒன்றே இல்லாமல் போய்விடும் என்கிற எச்சரிக்கையை செய்தார். லேபர் மந்த்லியிலும் ஒரே 'மய்யப்பட்ட அரசியல் நிர்ணய சபை' என எழுதி, இங்குள்ளவர்களுக்கு வழிகாட்டினார்.

அதேபோல் இந்தியாவை பிளவுபடுத்தும் மவுண்ட்பாட்டன் திட்டத்தை அவர் ஏற்கவில்லை.

இந்தியா வந்த பாமி தத் காந்தி, நேரு, படேல், ஆசாத், ஆசப் அலி, ராஜாஜி போன்றவர்களை சந்தித்தார். காங்கிரஸ் கம்யூனிஸ்ட்கள் சேர்ந்து தோழமையுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டினார். காங்கிரசின் 'பாஸ், இரும்பு மனிதன்' என கருதப்படும் படேலுடன் தான் அதிக நேரம் விவாதிக்க வேண்டியிருந்தது என தத் குறிப்பிட்டுள்ளார். பெதிக் லாரன்ஸ் தூதுக்குழு வந்த 1946 மார்ச்சில், டெய்லி ஒர்க்கர் பத்திரிகையாளராக தத் இந்தியப் பயணம் இருந்தது. தனது தந்தையின் மூதாதையர் இடமான கல்கத்தா சென்று மகிழ்ந்தார். தொழிலாளர் கூட்டங்களில் உரையாற்றினார். மே தின பேரணியில் பங்கேற்றார். கல்கத்தா தோழர்களின் அன்பில் திளைத்தார்.

அதேபோல் தன்னை சந்தித்த சோசலிஸ்ட் தலைவர் மதுலிமாயிடம், 1947 நவம்பரில், காங்கிரசை விட்டு நீங்கள் வெளியே போவது நல்லதல்ல என எடுத்துரைத்தார் தத். நேருவிற்கு ஆதரவான சக்திகள் வெளியேறுவது, படேல் போன்றவர்களையே பலப்படுத்தும் என அவர் கருதினார்.

1948ல் தோழர் ரணதிவே தலைமையில் மீண்டும் குறுங்குழு வாதம் கட்சியைப்பற்றியது. பெற்ற விடுதலையை ஏற்கவில்லை. அதிவீர நிலைப்பாடுகளால், லட்சம் உறுப்பினர்களை தொட்ட கட்சி பெருமளவு சரிந்து 20 ஆயிரம் என்றானது. தத் நேருவின் வெளிநாட்டு கொள்கையை பாராட்டி எழுதினார். திரும்பவும் கட்சி நிதானமடைய அவரின் கருத்துக்கள் உதவின. இந்திய கம்யூனிச இயக்கம் பற்றி புகழ் வாய்ந்த நூல் எழுதிய ஒவர்ஸ்ட் ரீட் விண்ட்மில்லர், 1951 கட்சி திட்ட வரையறைகளில் ரஜனி பாமி தத் செல்வாக்கு இருந்ததாக மதிப்பிட்டுள்ளனர்.

பின்னொரு காலத்தில் டாங்கே இவ்வாறு நினைவு கூர்ந்தார். மிக முக்கியமான கட்சி வரலாற்று கட்டங்களில் எல்லாம், ஆற்றுப்படுத்த தத் நம்மோடு நின்றுள்ளார். எம் பி ராவ் எடிட் செய்த கட்சி வரலாற்று ஆவணம் இப்படி பதிவை செய்தது.

"On so many critical the CPGB and Palme Dutt had corrected us- the three party letters of 1933, Dutt Bradley Thesis 1936, after Hitler attack, criticism on our wrong stand with regard to Muslim League and finally his letter to Andhra comrade in 1949"

1959ல் கேரளா இ.எம்.எஸ் ஆட்சி கலைக்கப்பட்டபோது, நேருவை

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 51

## நாக்பூர் வன்முறை

“தீவிரவாதம், ஆக்கிரமிப்பு, பலவந்தம் மற்றும் பிற கடவுள்களை அவமதிப்பதுநம் நாட்டின் இயல்பில் இல்லை, அவை ஏற்றுக்கொள்ள முடியாதவை” என்று சென்ற டிசம்பர் மாதம் பேசியவர் ஆர்.எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத்.

அவர்களுக்கு உண்மை தெரிந்து தான் இருக்கிறது. ஆனால் அதைப் போற்றவில்லை. மாறாக மாற்றவே முயற்சிக்கிறார்கள்.

அண்மையில் பேசிய பாஜக தலைவர் காத்ரி சொன்னார்: “தனி நாடு கோரியவர்களில் பெரும் பகுதியினர் இங்கேயே இருந்தனர், ஆனால் இந்தியா சமூக நல்லிணக்கத்தைப் பேணி வருகிறது. ‘ஜெய் பீம், ஜெய் பீம்’ என்று பிரச்சாரம் செய்பவர்கள், இந்து மதம் பெரும்பான்மையாக இருப்பதால்தான் இந்த நாட்டில் அரசியலமைப்பும் சட்டத்தின் ஆட்சியும் நிலவுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.”

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க மறுத்து, பிரிட்டிஷ்காரனுக்கு ஆதரவாக நின்ற இந்தக் கேடுகெட்ட ஆர்.எஸ். எஸ் பிஜேபிக்கு, உயிர்ப்பலி கொடுத்து விடுதலைக்காகப் போராடிய பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களைப் பார்த்து கேள்வி கேட்க என்ன யோக்கியதை இருக்கிறது?

மேலும் ஜெய் பீம் என்று சொல்வது முஸ்லிம்களா? அவர்கள் ஒதுக்க நினைப்பது முஸ்லிம்களை மட்டும் அல்ல. ஒடுக்கப்பட்டவர்களுக்கான விடுதலையை முன்னெடுக்கும் எல்லோரையும்தான்.

இந்த ஆண்டு ஹோலி கொண்டாடப்பட்ட போது, உத்தரப்பிரதேசத்தில் மசூதிகள் எல்லாம் துணி கொண்டு மூடப்பட்டன. முஸ்லிம்கள் வழிபாடு நடத்தக் கூடாது, அவர்கள் வீட்டிலிருந்து தெருவுக்கே வரக்கூடாது என்று உத்திரப்பிரதேச முதல்வரே எச்சரித்தார்.

வீதியில் தொழுகை நடத்தக் கூடாது என்றார்கள், பிறகு மசூதியில் தொழக்கூடாது என்றார்கள், இப்போது வீடுகளுக்குள் கூட தொழுகை நடத்தினால், அது மற்ற மதத்தைச் சார்ந்தவர்களுக்குத் தொந்தரவாக இருக்கிறது என்று முஸ்லிம் வீடுகளுக்குள் ரவுடிகள் சென்று மிரட்டுகிறார்கள்!

மத்தியப் பிரதேசத்தின் தெருக்களில் ஊர்வலங்களும் பேரணிகளும் வன்முறைத் தளங்களாக மாறி வருகின்றன.

பாபர் மசூதி, மதுரா மசூதி, ஞானவாபி மசூதி ஆகியவற்றுக்கடுத்து, இப்போது அவுரங்கசீப்பின் கல்லறையை இடித்து அகற்ற வேண்டும் என்று மதவெறி கும்பல் அடுத்த இலக்கிற்குத் தாவியுள்ளது.

இந்த நெருப்பை விசிறி விடுவதற்காக அவர்கள் திரைப்பட வடிவத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ‘சாவா’ (சிங்கக்குட்டி) என்ற திரைப்படம் வெளியானது. சத்ரபதி சிவாஜியின் மகனான சாம்பாஜி, முகலாயப் பேரரசர் அவுரங்கசீப்புடன் நடத்திய போரில் கொல்லப்பட்டதை இந்தத் திரைப்படம் விவரிக்கிறது.

அது அரசர்களுக்கிடையே நிலத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்தப்பட்ட யுத்தம். சாம்பாஜி படையில் முஸ்லிம்களும் இருந்தார்கள், அவுரங்கசீப் படையில் இந்துக்களும் இருந்தார்கள் என்ற உண்மையை மறைத்து விட்டு, ஏதோ இந்துக்களின் படைக்கும் முஸ்லிம்களின் படைக்கும் இடையே நடந்த போராக இது சித்தரிக்கப்படுகிறது. அவுரங்கசீப்புக்கு எதிரான வெறி திணிக்கப்படுகிறது.

நாக்பூர் 300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளது. இங்கு ஒருபோதும் வகுப்புவாத கலவரங்களைக் கண்டதில்லை. ஆர்.எஸ்.எஸ் தலைமை பீடம் இருக்கும் நாக்பூரில், மஹல் பகுதியில் உள்ள சிவாஜி சிலை அருகே விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தள அமைப்பினர் 250 பேர் மார்ச் 17ம் நாள் திரண்டனர். அவர்கள் அவுரங்கசீப் சமாதியை அகற்ற வேண்டும் எனக் கோரி கோஷங்களை எழுப்பினர். அவுரங்கசீப்பின் உருவப்படம் கொண்ட போஸ்டர்களை எரித்தனர். இந்நிலையில் அந்தப் போராட்டத்தின் போது இஸ்லாமியர்களின் புனித நூல் எரிக்கப்பட்டதாக வதந்திகள் பரவின.

இது எதிர்த்தரப்புக்கு ஆத்திரமூட்டி, ஒரு கலகத்துக்கு வித்திடும் உள்நோக்கம் கொண்டது. இப்போது ஒரு காகிதத்தைத் தான் எரித்தோம் என்று கதை சொல்கிறார்கள்.

1986 ஆம் ஆண்டு அரசாணை என்று எழுதப்பட்ட காகிதத்தை எரித்ததற்காக கலைஞர், பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்டோரின் சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டதை நாடறியும். வெறும் காகிதம்தான் என்று அப்போது விடவில்லை.

எதிர்பார்த்ததைப் போலவே முஸ்லிம்கள் வெகுண்டெழுந்தனர். சமாதியை அகற்றக் கோரி நாக்பூரின் சில பகுதிகளில் வன்முறை வெடித்தது. வன்முறையின் போது, பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, கடைகள் சேதப்படுத்தப்பட்டன, காவல்துறையினர் மீது கற்கள் வீசப்பட்டன.

நாக்பூரைச் சொந்த ஊராகக் கொண்ட மகாராஷ்டிரா முதல்வர் ஃபட்னாவிஸ், சட்டப்பேரவையில் பேசிய மக்களிடையே கோபத்தைத் தூண்டியதற்கு ‘சாவா’ திரைப்படத்தைக் குற்றம்சாட்டினார்.

ஆனால், திட்டமிட்ட தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லிம்கள்தான் எனும் மறைபொருளுடன், மோதல்களில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பாசிஸ்டுகள் முழு வேகத்துடன் களமிறங்கி விட்டனர். தடுக்க நினைப்பவர்கள் பிரிந்து நிற்கக் கூடாது.

### வேளாண் நிதிநிலை அறிக்கை

## பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிக்கை



வேளாண் நிதிநிலை அறிக்கையில் பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிப்பதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் எஸ்.குணசேகரன், பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு அரசின் வேளாண் நிதிநிலையில் அறிவிப்புகள் ஏராளம். எல்லாவற்றிற்கும் நில வரம்பு நிர்ணயிப்பது விவசாயிகளுக்கு முழுமையாகப் பயனளிக்காது. தமிழ்நாட்டில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வரும் சூழலில், இதன் மேம்பாட்டிற்கான திட்ட ஒதுக்கீடு இல்லை.

மானாவாரி, சிறுதானிய சாகுபடியின் அவசியத்தை அமைச்சர் குறிப்பிட்டிருந்தாலும், அதைப் பாதுகாக்கும் அளவில் திட்டங்கள், நிதி ஒதுக்கீடு இல்லை.

நெல் குவின்டால் ரூ.2500, கரும்பு டன் ரூ,4000 என்ற தேர்தல் வாக்குறுதி மறந்தது போலும், தற்போது நெல் குவிண்டால் ரூ.3000, கரும்பு டன் ரூ.4500 வழங்குமாறு விவசாயிகள் வலியுறுத்தி வரும் நிலையில், கரும்புக்கு மட்டும் டன்னுக்கு ரூ.349 ஊக்கத்தொகை சேர்த்து ரூ.3500 என அறிவித்திருப்பது நம்பிக்கைத் துரோகம் ஆகும்.

தொடர் இயற்கைப் பேரிடரில் சிக்கித் தவிக்கும் விவசாயிகள் எதிர்பார்த்திருந்த வேளாண் பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது.

வனவிலங்குகளிடமிருந்து வேளாண்மையை பாதுகாப்பதற்கான அறிவிப்புகள் இல்லாதது சரியானது இல்லை.

சத்தீஸ்கர் மாநிலம் கடந்தாண்டு பட்ஜெட்டில் 16.7 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது, தெலுங்கானா மாநிலம் 11.7 விழுக்காடு ஒதுக்கீடு செய்திருந்தது, தமிழ்நாடு அரசு கடந்தாண்டு 6.17 விழுக்காடு ஒதுக்கீடு செய்தது. இந்தத் தொகையை இரட்டிப்பாகிட நாங்கள் வலியுறுத்தி இருந்தோம். ஆனால் ஒரு விழுக்காடு மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது.

காவிரி வேளாண் பாதுகாப்பு மண்டலத்தில் வேளாண் தொழில் திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. மரபணு மாற்று விதைகளால் ஏற்படும் பாதிப்பு, செறிவூட்டப்பட்ட அரிசி, விளைநிலங்களைக் கையகப்படுத்துவது, சுற்றுச்சூழல் பாதிப்பு, தரிசு நில மேம்பாடு போன்றுவற்றுக்கான திட்டங்கள் முழுமையாக இல்லை. எனவே இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையை நிறைவேற்றும் பொழுது, இவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கேட்டுக்கொள்கிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

விமர்சித்தார் தத். 1962 இந்திய சீனா போரை, தொடர்ந்த 1964 கம்யூனிஸ்ட் இயக்க உடைவை அவர் துரதிருஷ்டமான நிகழ்வுகள் என வருந்தினார்.

தத் தனது மார்க்சிய பயிற்சியால், இந்தியத் தோழர்களுக்கு துணையாக நின்றார். சோவியத்தை ஸ்டாலினை உயர்த்திப் பிடித்தார். இந்திய மக்களின் விடுதலைக்காக ஓயாமல் குரலை லண்டனில் கொடுத்து வந்தார். அவர் காந்தியை கடுமையாக விமர்சித்தவர்தான். அதே நேரத்தில் லண்டனில் அவர் தேர்தலில் நின்றபோது, 1945ல் மகாத்மாவின் ஆசியை கோரினார். காந்தியும் வெற்றிபெற நல்வாழ்த்துகள் என்கிற செய்தியை அனுப்பியதாகவும் அறிய முடிகிறது. ஹங்கேரி 1956, செக் 1968 சோவியத் தலையீடுகளை தத் வரவேற்பவராகவே இருந்தார். அவர் அதை நியாயப்படுத்தியது விமர்சனமானது. அப்போது கம்யூனிஸ்ட்களுக்கு இருந்த ஒரே பற்றுக்கோல் சோவியத்தாக இருந்தது.

தத் Labour Monthly ல் பெரும் அறிஞர் பெருமக்கள் எழுதி வந்தனர். இந்தியா குறித்தும் ஏராள கட்டுரைகள் வந்தன. மார்க்சியம், சோவியத் பற்றி எழுதப்பட்டது. காந்தியின் கட்டுரை கூட அதில் இடம் பெற்றது. அவர் எழுதிய Britain, India and Swaraj அதில் வந்தது. இந்தியத் தோழர்கள் சட்டோ (சரோஜினி நாயுடு சகோ), எம் என் ராய்., கிருஷ்ண மேனன், சக்லத்வாலா, பி சி ஜோஷி, டாங்கே, சர்தேசாய், என் எம் ஜோஷி (தொழிற்சங்க தலைவர்), ஷேக் அப்துல்லா போன்றவர் எழுதியுள்ளனர்.

உலக அறிஞர்கள் பலர் அதில் பங்களித்தனர். பெர்னாட் ஷா, ரொமயின் ரோலந்த், எமிலி பர்ன்ஸ், ரால்ப் பாக்ஸ், ஸ்ட் ராட்சி, கார்ல் ராடெக், மௌரிஸ் டப், ஒலாப் பாமி, நெக்ருமா, பால் ராப்சன், புகாரின், கிளாரா ஜெட்கின் எனச் சிலரை சொல்லலாம்.

லண்டனில் வாழ்ந்த தத், இந்தியா குறித்து விடாமல் சிந்தித்தவராக இருந்தார். இப்படி 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளின் பெரும் பகுதியை செலவழித்த மனிதர், இந்தியாவில் கம்யூனிஸ்ட் அல்லாதார் மத்தியில் ஏனோ போய் சேரவில்லை. விடுதலைக்கால அனைத்து தலைவர்களுடனும் தன் விவாதத்தை நடத்தியவராக தத் இருப்பதைக் காணமுடிகிறது.

லேபர் மன்த்லி இதழ்கள் இணையத்தில் கிடைக்கின்றன. இந்தியாவில் அவருக்கு நெருக்கமாக இருந்த திலிப் போஸ் அவர் பற்றி எழுதியுள்ளார். சக்லத்வாலா பற்றி எழுதிய டாக்டர் பஞ்சனன் ஷாகா ரஜனி பாமி தத் குறித்து தனி நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கிய தத் மறைந்து (1974) அம்பது ஆண்டுகள் ஆன நிலையில், அவர் குறித்த சில செய்திகளை எழுதத் தோன்றியது

– ஆர்.பட்டாபிராமன்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலீடு ஈர்க்கப்பட்டதில் நிதிநிலை அறிக்கை பெருமிதம் கொள்கிறது.

கொரோனா காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு பணப் பலன் திட்டத்தை அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள் ஏப்ரல் மாதத்தில் இருந்து மீண்டும் பெறலாம் என அறிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவை எதிர்கொள்ள, 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது, ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதியை நிறுத்தி வைத்து, தனது கொள்கையை ஏற்க வேண்டும் என நிர்ப்பந்தித்து வரும் நிலையிலும் இருமொழிக் கொள்கையில் உறுதி காட்டி வருவதும், வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைத்திருப்பதும் பாராட்டி வரவேற்கத்தக்கது.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை, தொழிற்பயிற்சி அளிக்கும் திட்டங்கள் அறிவித்துள்ள போதிலும், அரசின் பல்வேறு துறைகளில் நிரந்தரத்தன்மை வாய்ந்த பணிகளில், ஒப்பந்தப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் பணி பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை. தனி நபர் வருமானம் உயர்ந்து வரும் தமிழ்நாட்டில், சொற்பத்தொகை தொகுப்பூதியத்தில் ஒப்பந்தப் பணியாளர்கள் பணிபுரிந்து வருவதை நிதி நிலை அறிக்கை காணத் தவறியது வருத்தம் அளிக்கிறது.

நூறுநாள் வேலைத் திட்டத்திற்கு தொழிலாளர் ஊதியப் பாக்கி உட்பட ரூ.3 ஆயிரத்து 896 கோடி நிதி வழங்க மறுத்து வருவதைக் கடுமையான குரலில் கண்டித்திருக்க வேண்டும். சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறையினர் மின் கட்டணத்தில் சலுகை கோரி வருவதையும், நிலைக்கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருவதையும் நிதி நிலை அறிக்கை கருத்தில் கொண்டிருக்க வேண்டும். 2025–26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமூகத்தின் பல தரப்பு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்துள்ள போதிலும், தொழிலாளர்கள், அடித்தட்டு உழைக்கும் மக்களின் எதிர்பார்ப்பு தொடர்கிறது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது என்று இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நீயா நானா? தடை சரிதானா?



த.லெனின்

**தமிழ்நாட்டின் மரபு வழி முறையிலேயே விவாதம் முக்கிய இடத்தைக் கொண்டிருக்கிறது. அதற்கென்று பட்டிமன்றங்கள் மிகப் பழம் காலத்திலேயே நடத்தப்பட்டு இருப்பதற்கான வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. பட்டிமன்றத்தில் தங்கள் கருத்தைக் கூறி வாதிடவும் மறுப்போர் தனது தரவுகளைக் காட்டி மக்களிடம் பேசும் ஒரு வெளிப்படையான கருத்தியல் செயல்பாடாகும்.**

அதிலும் குறிப்பாகப் பட்டிமன்றத்தில் பேசக்கூடியவர்கள் கொடியோடு வந்து வாதங்களை எடுத்து வைத்தார்கள் என்ற குறிப்புகளும் காணக்கிடக்கின்றன. அரசியல் கட்சிகள் துவங்குவதற்கு முன்பே கொடிகளோடு விவாதம் நடத்திய பெரும் பாரம்பரியம் தமிழ்நாட்டின் பாரம்பரியம் அதனால் தான் என்னவோ தொலைக்காட்சி அலைவரிசை முழுவதும் முக்கியத் தலைப்புகளில் நடைபெறும் விவாதங்கள் பெரும் பேசுபொருளாக மாறி வருகின்றன. மக்களின் சிந்தனையில் எது சரி எது சரியல்ல? என்பதை முடிவு செய்வதற்கு இதுபோன்ற விவாதக் களங்கள் தற்போதும் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

## அனைவராலும் ரசிக்கப்படும் நீயா நானா?

வாராவாரம் ஆரவாரமாக விவாதிக்கப்படும் விஜய் டிவி நிகழ்ச்சியின் தலைப்புதான் நீயா நானா? விஜய் தொலைக்காட்சியில் பிரபல விவாத நிகழ்ச்சியான நீயா நானாவில் மும்மொழிக் கொள்கை தொடர்பான விவாதம் ஒளிபரப்பாக இருந்த நிலையில் கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டு வேறு நிகழ்ச்சி ஒளிபரப்பானது. இந்நிலையில் மும்மொழிக் கொள்கை தொடர்பான விவாதம் என்ற பெயரில் திமுக எழுதிய ஸ்கிரிப்ட்தான் அந்த நிகழ்ச்சி எனவும், அதில் கலந்து கொள்ள தன்னை அழைத்தும் அதில்தான் கலந்து கொள்ளவில்லை என எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று போட்டு உடைத்திருக்கிறார் பாஜக பிரமுகரான அலிசா அப்துல்லா!

தேசியக் கல்விக் கொள்கையில் உள்ள மும்மொழிக் கல்வி தொடர்பாக தமிழக அரசு பாஜக தலைமையிலான ஒன்றிய அரசுக்கு இடையே கடும் மோதல் நிலவி வருகிறது. தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே தமிழ்நாட்டுக்கு நிதி தருவோம் என மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல மாறிவிட்டது.இதுவரை எந்த அரசாங்கமும் செய்யாத கொடுமைகளை ஒன்றிய பாஜக அரசு இப்போது அரங்கேற்றி வருகிறது.

இதுகுறித்த விவாதம் பார்வையாளர்கள் மத்தியில் மிகப்பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பது நியாயம் தானே? கருத்து வலிமை உள்ளவர்கள் ஒருபோதும் இதைத் தடை செய்ய மாட்டார்கள்.

## மும்மொழி எதிர் இருமொழி!

மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்களும், மும்மொழிக் கொள்கை எதிர்ப்பாளர்களும் கலந்து கொண்டு விவாதம் செய்த நிலையில் சமூக வலைதளங்களிலும் விளம்பரம் வெளியானதைத் தொடர்ந்து சில நாட்களுக்கு முன்பு அந்தப் பதிவு நீக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இந்நிகழ்ச்சி ஒளிபரப்பாகாமல் அதற்குப் பதிலாக வேறொரு நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. இது முழுக்க முழுக்க பாஜகவின் ஊடகங்கள் மீதான அழுத்தத்தின் காரணமாகவே அந்த நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதாக சமூக வலைதளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்தன.

இந்த விவாதத்தின் போது மும்மொழிக் கொள்கை மீது எழுப்பப்பட்ட அடுக்கடுக்கான கேள்விகளுக்கு பதிலளிக்க இயலாமல் அவர்கள் இக்கட்டில் மாட்டியுள்ளனர். இருமொழிக் கொள்கைக்கான ஆதரவு வெகுமக்கள் மத்தியில் இயல்பான மொழியில் வெற்றிகரமாக அமைந்ததால்தான் சீப்பை ஒளித்து வைத்துவிட்டு திருமணத்தை நிறுத்திவிடும் முயற்சியாகத் தடை செய்துள்ளனர்.




## கருத்துகளுக்குக் கடிவாளம் வெறுப்புப் பேச்சுக்கு வெண்சாமரம்!

ஒன்றிய ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் தமிழ்நாட்டைச் சார்ந்த எல்.முருகன் இதில் நேரடியாகத் தலையிட்டுத் தடை செய்திருக்கிறார் என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனந்த விகடன் பத்திரிகையில் அமெரிக்காவில் இந்தியர்கள் கை விலங்கு இட்டு அவமானப்படுத்தி அனுப்பப்பட்டதைக் கேலிச்சித்திரமாக வரைந்து பிரதமரின் கைகளில் சங்கிலியால் கட்டப்பட்டு இருப்பதைப் போல வரைந்த காரணத்தால் அதனை தடை செய்ததை நாம் அறிவோம். எனவே, கருத்துச்சுதந்திரம் என்றாலே இவர்களுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. ஆனால், மறுபுறத்தில் வெறுப்புப் பேச்சின் ஊற்றுக் கண்ணாக அதன் தலைவர்களே இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சிறுபான்மையினர் இஸ்லாமியர் வெறுப்புப் பிரச்சாரங்களை அவர்கள் மேற்கொள்ளும்போதெல்லாம் எந்தவிதக் கூச்ச நாச்சமுமின்றிப் பொய்களையும் வதந்திகளையும் அடித்து விடுவதே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். கலைத்துறையில் கூட குறிப்பாக சினிமாவில் காஷ்மீர் பைல்ஸ், கேரளா பைல்ஸ் என்று வெறுப்பைச் சிலாகித்துப் பேசியதோடு மட்டுமல்லாது அதற்காக ஒன்றிய அரசும், பாஜக ஆளும் மாநில அரசாங்கங்களும் விடுமுறை விட்டு அந்தப் படங்களைப் பார்க்க வைத்ததும் இவர்களின் உண்மை முகத்தைக் கடந்த காலங்களில் வெளிப்படுத்திற்று. ஆச்சரியம் என்னவென்றால் இதற்குத் தலைமை தாங்குபவரே பிரதமர அமைச்சராக இருக்கிறார் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் உள்துறை அமைச்சராக இருக்கிறார் என்பதுதான் வேதனையிலும் வேதனை!

## 16 ஆண்டுகளாக தொடரும் நீயா நானா?

16 ஆண்டுகள் 500+ நிகழ்ச்சிகள் கடந்து வெற்றிகரமமாக நடைபோட்டுக்கொண்டிருக்கிறது நீயா நானா. இத்தனை வருடங்கள் கடந்து இன்றும் அதே ஸ்டைல், அதே நெறியாளர், அதே வரவேற்பு என மக்களை ஈர்த்துக்கொண்டிருக்கிறது. நீயா நானா நிகழ்ச்சி பிடிக்கும் விதவிதமான பேசு பொருளான தலைப்புகளைப் பிடிப்பதுதான் இந்த நிகழ்ச்சியின் வெற்றியின் ரகசியம். சாதி மறுப்பு திருமணம் அதற்கு எதிரானவர்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தின் போது சாதிப் பற்றில் ஊறி இருந்த தந்தை அதற்காக வெட்கப்பட்டு தான் இன்றிலிருந்து அதிலிருந்து வெளியேறி விட்டேன் என்று சொல்லும் போது இது பல நிலைகளில் மனங்களையும் வென்றிருக்கிறது, மாற்றங்களையும் தந்திருக்கிறது.

இட ஒதுக்கீடு வேண்டும் இட ஒதுக்கீடு வேண்டாம் என்ற தலைப்பில் நடத்திய நிகழ்ச்சி அரசு பள்ளி ஆசிரியர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்கள், கிராமம் எதிர் நகரம், தமிழ்நாட்டின் மண்டல வாரியான மொழிப் பிரயோகங்கள் குறித்து விவாதம் என்பது உள்ளிட்ட பல தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றிருக்கிறன.

### கருத்துச் சுதந்திரமும் பாசிசமும்

கருத்துச் சுதந்திரம் (Freedom of Expression) என்பது மனிதர்களின் அடிப்படை உரிமைகளில் முக்கியமானதாகும். மனித உரிமைகள் சாசனம், அரசியலமைப்பு, பிற சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது. இந்த உரிமை அரசியல், சமூக மற்றும் பண்பாட்டுத் துறைகளில் பொதுமக்களுக்குத் தங்கள் கருத்துகளைத் தன்னிச்சையாக வெளிப்படுத்தவும், அரசை விமர்சிக்கவும், சமூகச் சீர்திருத்தங்களை வேண்டவும் வழிவகுக்கிறது.

சமுதாயத்தில் மாறிவரும் சிந்தனைகள், விவாதங்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்களுக்கான முக்கிய மூலமாகவும் ஊடகங்கள் விளங்குகின்றன. எனினும், இச்சுதந்திரம் முழுமையானதல்ல, அது அவ்வப்போது ஆளும் வர்க்கங்களால் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறது. பாசிசம் இதனை அறவே வெறுக்கிறது. அதன்மீது கட்டுப்பாடுகளை விதிக்கிறது. மொத்தத்தில் தங்களின் கருத்துகள் தவிர வேறு எந்தக் கருத்தும் மக்கள் மத்தியில் சென்று விடக்கூடாது என்ற ஒற்றைக் கருத்துத் திணிப்பே அதன் உறுதியான நிலைப்பாடாக மாறிவிட்டது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

## தமிழ் பாய்ஸ் எதிர் நார்த் இந்தியன் கேர்ள்ஸ்

இதில், அந்தப் பக்கம் வட இந்தியப் பெண்கள் அழகாக தமிழ்ப் பாடல்கள் பாட, நம்மவர்கள் ‘துஜே தேக்கா தோயே’ என்று ஹிந்திப் பாடலைப் பாடியிருப்பார்கள். வடஇந்தியப் பெண்களுக்கு நம் ஆண்களிடம் ரொம்பப் பிடித்த குணம் எது என்று கேட்டால் அவர்கள் ஏமாற்ற மாட்டார்கள், அத்துடன் பெண் என்பதற்கான கிண்டல் தொணியில் பேச மாட்டார்கள் என்று சொல்லும் போது அனைவரும் அசந்து போவோம்.

## நெறியாளர் கோபிநாத்

விஜய் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், தனியார் பண்பலை ஒன்றில் வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணியாற்றுகிறார் கோபிநாத். இவர் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் பிறந்தவர். தற்போது சென்னையில் வசித்து வருகிறார். கோபிநாத் சிறந்த ஜனநாயகத் தன்மையோடு அதே நேரம் மோதல் ரசாபாசமாக ஆகிவிடாமல் மிக நளினமாக நெறிப்படுத்தும் விதம், கண்டிப்புடன் நடந்து கொள்ளும் விதம் என்பதெல்லாம் இந்நிகழ்ச்சியின் சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழ் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களில் தன்னுடைய தனித் தமிழ் மொழிநடைக்காகவும், தனிப்பாங்கிற்காகவும் இவர் மிகவும் அறியப்படுகிறார். இவர் தொகுத்து வழங்கும் சில முக்கியமான நிகழ்ச்சிகள்:

நீயா நானா?
விஜய் விருதுகள்
குற்றமும் பின்னணியும், நடந்தது என்ன?
உன்னால் முடியும் போன்றவையாகும்.

இருந்தும் இந்த நீயா நானா நிகழ்ச்சியின் மும்மொழி விவாதம் இப்போது தடை செய்யப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ள முடியாதவர்கள் காலம் காலமாக இந்த வழியைத்தான் பின்பற்றுகிறார்கள் என்பதற்கு மீண்டும் ஓர் உதாரணம் இது!

## கருத்துச் சுதந்திரத்தின் முக்கியத்துவம்

கருத்துச் சுதந்திரம், பொதுவாகச் சமுதாயத்திற்குப் பல்வேறு வகையான நன்மைகள் பயக்கும் உரிமையாக விளங்குகிறது. அரசியல் உரையாடல்களில் (அரசியல் சொற்பொழிவு), இது ஜனநாயகத்தை வளர்க்கும் ஒரு முக்கியக் கூறாகக் காணப்படுகிறது. ஒரு நாட்டில் குடிமக்கள் தங்கள் அரசை விமர்சிக்கவும் அரசியலில் தங்கள் குரலை எழுப்பவும், புதிய யோசனைகள் மற்றும் சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்கவும் உண்மையில் தகுதி பெறுவார்கள் என்றால், அந்தக் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில்தான் இது நிகழ முடியும்.

பேச்சு, எழுத்து, இசை, நாடகம், ஓவியம், நிகழ்த்துக் கலை, பல்லூடகம், நம்பிக்கைகள், இணையம் எனப் பல்வேறு வடிவங்களிலும் கட்டுப்பாடுகளின்றிக் கருத்துகளை ஆக்க, அறிய, வெளிப்படுத்த, பகிர ஆகியவற்றுக்கான சுதந்திரம் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமாகும்.

சமூக மாற்றங்கள் அடைவதற்கும், நியாயத்தை நிலைநாட்டுவதற்கும், கருத்துச் சுதந்திரம் ஓர் அத்தியாவசிய உரிமையாகும். அடக்குமுறையால் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த முடியாத மக்களுக்கு இது ஒரு குரலாகவும் அதாவது குரல் அற்றவர்களின் குரலாக இருக்கிறது. சமூக ஆர்வலர்கள், மனித உரிமைப் போராளிகள், ஊடகத்துறைப் பணியாளர்கள் தங்கள் நிலையை வெளிப்படுத்தும் இச்சுதந்திரத்தை அதிகம் பயன்படுத்துகிறார்கள். அதுதான் நமது ஜனநாயகத்தின் மிக முக்கியக் கூறு. ஆனால், ஜனநாயகத்தை அழிப்பதற்கு முதலில் கருத்துச் சுதந்திரத்தின் குரள்வலையைத்தான் அறுப்பார்கள் என்பதற்கு பாஜக ஆட்சியின் தொடர்த் தாக்குதல்களே ஆதாரமாக உள்ளன. ஒருபோதும் கருத்துச் சுதந்திரத்தை அனுமதிக்க மாட்டார்கள். எனவே, என்ன விலை கொடுத்தேனும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க அணி திரள்வோம்! ஜனநாயகத்தைப் பலப்படுத்துவோம் மக்களாட்சி மாண்பினை வெற்றி பெறச் செய்வோம்!

தொடர்புக்கு: 9444481703

# கடலையும் விட்டுவைக்காத கார்ப்பரேட்டுகள்



வ.மணிமாறன்



## மன்னார் வளைகுடாவில் ஹைட்ரோ கார்பன் டுக்க ஏலம்

**ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான திறந்தநிலை உரிமம் வழங்கும் கொள்கையின் பத்தாவது சுற்று ஏலத்தை (OALP-BID) அறிவித்துள்ளது.**

11.02.2025 அன்று வெளியான இந்த அறிவிப்பில், மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தின் 9,990.96 சதுர கி.மீ. பரப்பு உள்ளிட்ட 25 ஆழ்கடல் தொகுதிகளும் (1,91,986 ச.கி.மீ. கடற்பரப்பு) இடம்பெற்றுள்ளது.

ஹைட்ரா கார்பன் எடுக்கப்பட உள்ள இந்த மன்னார் வளைகுடா பகுதியை, யுனெஸ்கோ பரிந்துரை அடிப்படையில் கடல்சார் உயிர்க்கோள காப்பகம் (Marine Biosphere Reserve) என 1989 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு அறிவித்தது. இது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் முதல் கடல்சார் உயிர்க்கோள காப்பகமாகும்.

மன்னார் வளைகுடா கடற்பகுதி, அரிய வகை பவளப் பாறைகள், கடல் புல் படுகைகள், கடல் வாழ் உயிரினங்கள், மீன்கள், சதுப்பு நிலங்கள், கழிமுகங்கள், சேற்றுப் படுகைகள், தீவுகள், காடுகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளை உள்ளடக்கிய வளமான பல்லுயிர் மண்டலமாகும். இயற்கைப் பேரிடர் காலங்களில் மீனவ கிராமங்களுக்கும் மீனவர்களுக்கும் பாதுகாப்பு அரணாகவும் இருந்து வருகிறது. கடல்சார் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டு, உலக பாரம்பரியத் தலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மன்னார் வளைகுடாவில், ஹைட்ரோ கார்பன் எடுக்க ஏல அறிவிப்பு வெளியிட்டிருப்பது சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடம் மட்டுமல்ல, மீனவ மக்களிடமும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம், ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் முதல் தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் வரையிலும் பரவியுள்ளது. லட்சத்தீவு கடலின் தென்கிழக்கு முனைக்கும், இலங்கையின் மேற்கு கரைக்கும் இடையே இந்தியப் பெருங்கடலில் 560 சதுர கி.மீ பரப்பளவில் விரிந்து கிடக்கும் வளைவான கடற்பகுதியாகும். காரை சல்லித் தீவு, விலங்கு சல்லித் தீவு, வான்தீவு உட்பட 21 தீவுகளும், பல்வேறு வகையான கடல் வாழ் உயிரினங்களின் புகலிடமாகவும் உள்ளன. அரிய கடற்பசு இனத்தை பாதுகாப்பதற்கான இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகத்தை தமிழ்நாடு அரசு செப்டம்பர் 2021ல் அறிவித்துள்ளது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் வளைகுடா பகுதியில், ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்காக ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படும் போது, வெளியேற்றப்படும் மண் மற்றும் கழிவுகளால் பல்லுயிர் வளம் பேரழிவுக்கு உள்ளாகும். மீனவர்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும்.

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

### விருது பெற்ற உயிர்க்கோள காப்பகம்



சர்வதேச அளவில் உயிர்க்கோள காப்பக மேலாண்மைக்காக யுனெஸ்கோவின் 'மைக்கேல் பட்டீஸ்' விருது வழங்கப்படுகிறது. இந்தியாவில் முதன் முறையாக மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில், இயற்கை வளத்தைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக தேசிய கடல்வாழ் உயிரினப் பூங்காவின் இயக்குநர் ஜகதீஷ் பகான் சுதாகருக்கு, யுனெஸ்கோவின் மைக்கேல் பட்டீஸ்' விருது வழங்கப்பட்டது. 14.06.2023 அன்று பிரான்சில் அவர் விருதைப் பெற்றுக்கொண்டார். கடல் வளப் பாதுகாப்பு பணிக்கு கிடைத்த அங்கீகாரம் என்று ஜகதீஷ் பகான் சுதாகர் தெரிவித்தார்.

### கார்ப்பரேட்டுகளுக்கு உரிமம்

தமிழ்நாடு, புதுச்சேரியில் நிலப்பகுதியை ஒட்டிய ஆழமற்ற கடற்பகுதியில் 30 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பிலும் ஆழமான கடற்பகுதியில் 95 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பிலும் ஹைட்ரோ கார்பன் இருப்பதாக ஒன்றிய பெட்ரோலியத் துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது. இவற்றை திறந்தநிலை உரிமம் வழங்கும் கொள்கை (லிகிலிறி) அடிப்படையில், வேதாந்தா, ரிலையன்ஸ், ஓ.என்.ஜி.சி உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு கொடுத்து வருகிறது. இப்படிக் கொடுக்கப்பட்ட அரிட்டாபட்டி டங்ஸ்டன் எடுக்கும் திட்டம், மதுரை வாழ் மக்களின் போராட்டத்தால் ஒன்றிய அரசு நிறுத்திவைத்துள்ளது.

### மன்னார் வளைகுடாவில் எரிவாயு கிணறு அமைக்கக் கூடாது

**– முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்**



பிரதமர் நரேந்திர மோடிக்கு இப்பிரச்சனை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் இருந்து..

"பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு எடுப்பதற்கான ஆழ்துளை எரிவாயு கிணறுகள், மன்னார் வளைகுடா கடற்பகுதியில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்பு, அவற்றின் வளமான பல்லுயிர் பெருக்கம் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தக்கூடும் மற்றும் கடலின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பையும் சீர்குலைக்கக்கூடும் என்று கவலையோடு குறிப்பிடுகிறேன். வண்டல் படிவுகள், நச்சுக் கழிவுகள் வெளியேற்றம் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் அழிவு போன்ற அபாயங்கள் மட்டுமின்றி, மன்னார் வளைகுடாவை தங்கள் வாழ்வாதாரத்திற்காக நம்பியுள்ள லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும்.

ஒன்றிய அரசின் ஆழ்துளை எரிவாயு கிணறுகள் அமைக்கும் நடவடிக்கைகளால் ஏற்படும் இதுபோன்ற எந்தவொரு இடையூறும், முழு கடலோர பகுதியையும் பாதிப்படையச் செய்யும். இது கடலோர சமூகங்களிடையே பெருத்த அச்சத்தை உருவாக்கியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இந்த ஏல அறிவிப்புக்கு முன்பாக ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசிடம் கருத்து எதையும் கேட்கவில்லை. உரிய ஆலோசனை கேட்கப்பட்டிருந்தால், அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் தமிழ்நாடு அரசின் சார்பில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கும்.

எனவே, இந்தச் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் ஆழ்துளை எரிவாயு கிணறுகள் அமைப்பதற்கான ஏல முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும், ஆழ்துளை எரிவாயு கிணறுகள் அமைப்பதற்காக அறிவிக்கப்பட்ட அனைத்து பல்லுயிர் நிறைந்த பகுதிகளையும் லிகிலிறிலிருந்து நீக்க வேண்டும். எளிதில் பாதிக்கப்படக்கூடிய, பாதுகாக்கப்பட்ட இந்த சுற்றுச்சூழல் அமைப்புகளின் எதிர்காலம் ஆபத்தில் இருப்பதை கருத்தில் கொண்டு, இந்த முக்கியமான பிரச்சினையில் பிரதமர் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும்."



கலை இலக்கியப் பூங்கா

# கந்தர்வனின் "சாசனம்"



ஆ.சிவசுப்பிரமணியன்

**குரலற்ற மனிதர்களைக் கதை மாந்தர்களாக்கி அவர்களின் ஏழ்மையையும் துயரத்தையும் முன்வைத்து பச்சாதாபத்தைக் கோருகிற எழுத்துக்களாக கந்தர்வனின் எழுத்துக்கள் எந்த இடத்திலும் இல்லை.**

மாறாக அவரது எழுத்துக்கள் காலங்காலமாக அவர்களுக்கு மறுக்கப்பட்டு வந்த உரிமைகளையும் சாதிக்கும் ஆணாதிக்கத்திற்கும் எதிரான சமதர்மச் சிந்தனையைக் கதைகளினூடாக வாழ்வினூடாக வாசிப்பவர்களின் மனங்களிலும் ஏற்றிச் சக மனிதர்கள் மீதான நேசச் சிந்தனையைச் சுரக்கச் செய்கிற எழுத்துக்களாகவே காலத்திற்கும் நிலைத்திருக்கும் (தினேஷ் பழனிராஜ்).

ஆங்கிலத்தில் சார்ட்டர் (Charter) என்று குறிப்பிடப்படும் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லாகப் பயன்படுத்தப்படும் சொல் 'சாசனம்'. சமஸ்கிருத மூலச் சொல்லான இச்சொல்லுக்கு மாற்றாக மக்களின் பயன்பாட்டில் உள்ள சொல் 'பத்திரம்' என்பதாகும். சொத்துக்களின் மீதான உரிமையை இது வெளிப்படுத்தி நிற்பதால் உரிமைப் பத்திரம் என்று குறிப்பதும் உண்டு. இத் தன்மையால் இது பாதுகாப்பாகப் பேணப்பட வேண்டிய ஒன்று என்பதன் அடிப்படையிலேயே பத்திரம் என்று குறிப்பிட்டார்கள் என்று கூறுவோரும் உண்டு. சரி, சொல்லாராய்ச்சிக்குள் நுழையாமல் கதைக்குள் நுழைவோம். இக் கதையின் களம் மதுரையில் இருந்து தஞ்சாவூர் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள மாவட்டத்தில் அடங்கிய கிராமமாகும்.

### கதைக்கரு

கதை சொல்லியின் அப்பா அடிக்கடி ஒரு பத்திரத்தைத் தன் வீட்டில் 'ஆள்பத்தி அறைக்குள் (ஆவண அறை)' இரும்புப் பெட்டிக்குள் தேடிக் கொண்டே இருக்கிறார். அது என்ன பத்திரம் என்ற ஆர்வம் வாசகனுக்குத் தோன்றும் போது கதை சொல்லியின் தாத்தா அறிமுகம் செய்யப்படுகிறார்.

அப்பகுதியை ஆளும் மகாராஜா தன் ஊர்ப்பக்கம் வருகை தந்த போது அப்பகுதியின் பேஷ்கார் (வட்டாட்சியர் போன்று ஒரு பகுதியின் வருவாய் அதிகாரி. உருது மொழிச் சொல்) பதவி வகித்த தாத்தா வேளாவேளைக்கு மகாராஜாவுக்கு நல்ல சாப்பாடு போட்டு, மன்னிக்கவும் நல்ல விருந்து வைத்து செம கவனிப்புக் கவனித்தார். மனம் குளிர்ந்துபோன மகாராஜா அரண்மனைக்குத் திரும்பியதும் அப்பகுதி விளை நிலங்களையும் கிராமங்களையும் பேஷ்காருக்கு சாசனமாக எழுதிக் கொடுத்தார். அப்போது ஏற்கெனவே பயிர் செய்து கொண்டிருந்தவர்கள் என்ன ஆனார்கள் என்கிறீர்களா? சொல்லாமல் இருப்பாரா கதாசிரியர்! இது தான் நடந்தது:

'தாத்தா அரண்மனைக்குப் போய் சாசனங்களையும் பட்டயங்களையும் வாங்கி வந்த எட்டு நாட்களுக்குள் இருபத்தோரு கிராமங்களில் ஆள்களைத் திரட்டினார். தங்களுடையதென்று எண்ணி உழுதுகொண்டிருந்த குடியானவர்களை நிலங்களில் இருந்தும் ஊர்களிலிருந்தும் மகாராஜாவின் சாசனங்களைக் காட்டி விரட்டினார். அடிதடிகளும் நாலு கொலைகளும் நடந்ததாகப் பேச்சுண்டு.

சாசனம் என்கிற கதைத் தலைப்பு இப்ப புரிஞ்சிப் போச்சி என்கிறீர்களா? சரியாப் புரிஞ்சிருக்காது. கதையே இப்பதான் தொடங்குது. பேஷ்கார் தாத்தாவுடைய கல்யாண குணங்கள் தெரியவேண்டாமா! அதைக் கதைசொல்லியின் வாயிலாகக் கேட்போமே! கதையின் தொடக்கப் பகுதியிலியே ''தாத்தா வீட்டிலிருந்து எப்போது புறப்பட்டுப் போனார். எந்த ஊரில் யார் வீட்டிலிருக்கிறார். ராத்திரி எத்தனை மணிக்கு வருவார் என்பதெல்லாம் வீட்டில் யாருக்கும் தெரியாது. உள்ளூரில்தான் தங்கியிருக்கிறார் என்பதுபோல் நக்கலாக ஒருவர் சொல்ல,'' "அதெல்லாமில்லை சிறைக்குளமோ, பண்ணாந்தையோ, கீரத்தையோ எங்கேயிருக்காகன்னு யார் கண்டா? என்று அடுத்த ஆள் பேசிவிடும்'' 'சில சமயம் விடியற்காலையில் சிவந்த கண்களோடு வந்து சேர்வாராம். வந்ததும் பரபரவென்று வீட்டு ஆட்கள் ஒரு அண்டா நிறையத் தண்ணீர் கொண்டுவந்து வாசலில் வைப்பார்கள். குளிரக் குளிரக் குளித்து வேட்டி துண்டை நனைத்துப் போட்டுவிட்டு வீட்டிற்குள் நுழைவாராம்' என்று தாத்தாவை அறிமுகப் படுத்திவிடுகிறார் கதை சொல்லி. இதுக்குமேல தாத்தாவின் இராப்பயணத்தின் இரகசியத்தைக் கண்டறிய ஒரு துப்பறியும் சாம்புவோ சங்கர்லாலோ வாசகருக்குத் தேவையில்லைதானே? ஊர் அறிந்த ரகசியம்!

சரி. தாத்தாவ விட்டு விலகி கதை சொல்லியின் அப்பா தேடும் சாசனம் என்னவென்று பார்ப்போமே! அவர் தேடுவது 'ஊர்க்கோடியில் குறவர் குடிசைகளுக்கு மத்தியில்' ஒரு பிரமாண்டமான புளிய



மரமும் அது நிற்கும் துண்டு நிலமும், தன் குடும்பத்திற்குரியது என்பதற்குச் சான்று கூறும் சாசனம் தான். அந்த ஒத்தப் புளியமரத்தில் இருந்து கிடைக்கும் புளி மிகவும் சுவையானது. குறவர் குடியிருப்புக்கு நடுவில் இருப்பதால் கொறட்டுப் புளி என்று அவர் அதை அழைப்பார். கதை சொல்லியின் அப்பாவுக்கு இது 'ரொம்பப் பிடித்தமானது.' "வெகு தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு குன்று பச்சையாய் நிற்பது தெரியும். அருகில் வந்து அண்ணாந்து பார்த்தால் ஆயிரம் கிளைகளோடு அடர்ந்த அந்த மரத்திற்குள் ஒரு தோப்பு அசைந்தாடுவது போலிருக்கும்."

ஆண்டு தோறும் புளியம்பழம் உலுக்க கதை சொல்லியின் அப்பா பத்து ஆட்களோடும் ஒரு கட்டுச் சாக்குகளோடும் அந்த ஒத்தப் புளியமரத்தடிக்குப் போவார். அவர் போகும் முன்னர் முதல் நாளே தான் வரப்போவதைச் சொல்லியனுப்பிவிடுவார். பன்றிக் கழிவுகளையெல்லாம் குடியிருப்பவர்கள் அகற்றி தரையைச் சுத்தமாக்கி வைத்திருப்பார்கள். புளி உலுக்கலன்று தனியாய் உள்ள ஒரு குடிசையில் இருந்து கிழவி ஒருத்தி தன் மகளுடன் வெளியே வருவாள். அக்கிழவியின் மகளை, 'குறவர் கூட்டத்திலிருந்து விலகி தனியாய் ஆகாயத்திலிருந்து வந்து பிறந்தது போல கிழவியின் மகள் தாத்தா ஜாடையில் தாத்தா நிறத்தில் வந்து நிற்பாள். அப்பாவுக்கும் அந்தப் பொம்பிளைக்கும் பதினைஞ்சு வயசு வித்தியாசமிருக்கும்; சின்னவள்.' என்று அறிமுகப்படுத்துகிறார் கதைசொல்லி. இதைப் புரிந்து கொள்ள ஓர் உரையாசிரியர் தேவையில்லைதானே!

தன்னுடன் உறவுகொண்டு வாழ்ந்து, தனக்கு ஒரு பெண் பிள்ளையையும் பெற்றுக்கொடுத்த ஒரு விளிம்பு நிலை சமூகத்துப் பெண்ணுக்குப் பேஷ்கார் தாத்தா வைத்துவிட்டுப் போன அற்பமான சொத்துதான் இந்தப் புளியமரமும் அது நிற்கும் நிலமும் என்பது வாசகனுக்குப் புரிந்துவிடுகிறது. கதை சொல்லியின் அப்பன்காரனுக்கும் இது வெளிப்படையாகத் தெரிந்த உண்மைதான். என்றாலும் பாவிப்பயல்! புளியமரத்தையும் அது நிற்கும் துண்டு நிலத்தையும் தனதாக்கிக்கொள்ள சாசனத்தைத் தேடிக்கிட்டேஏஏஏஏ இருக்கான். சரி கதை முடியப்போகுது. அதுக்கு முன்னாடி நடந்த இரண்டு நிகழ்வுகள் இருக்கே, அதுதான் கந்தர்வனை அடையாளம் காட்டுது.

வழக்கம் போல் புளியம் பழம் உலுக்கியபிறகு தன் காலால் சிறிது புளியம் பழத்தைத் தள்ளி கிழவிக்கென்று ஒதுக்குவது கதைசொல்லியின் அப்பாவின் வழக்கம். அது போல் ஒதுக்கியபோது அக்குவியலின் முன்னால் வந்த ஒருவன் 'இதையும் அள்ளிக்கிட்டுப் போயிருங்க' என்றான். அவன் வேறுயாருமில்ல. கிழவியின் மருகன்தான் (பேஷ்கார் தாத்தாவுக்கும் தான்!). 'சற்றுக் கலங்கிப் போனாலும் விட்டுக் கொடுக்காமல்' "இதையும் அள்ளிக்கட்டுங்கடா" என்று சொல்லிவிட்டு அப்பா நடந்தார்.

இது நடந்த மறுவருடம் மறுநாள் புளியம்பழம் உலுக்கப்போவதாகக் கூறிவிட்டு வழக்கம்போல் பத்துப் பேரோடு போனார். 'மரத்தடிக்குப் போகையில் தரையெங்கும் பன்றிக்கழிவுகள். எங்கும் அசிங்கமும் நாற்றமும்.' கயிற்றுக் கட்டிலில் கிழவி உட்கார்ந்திருக்க, மகளும், மருமகனும் பிள்ளைகளுடன் நின்றார்கள். குறவீட்டு ஆள்களும் மொத்தமாகக் கூடியிருந்தனர். கிழவியின் மகளைக் கடுமையாகப் பார்த்தவாறு "என்ன இதெல்லாம்" என்று அதட்டினார்.

"இனி மேற்பட்டு இந்த மரத்தை நாந்தான் உலுக்குவேன். இதிலே எனக்குப் பாத்தியதை உண்டு" என்று கிழவியின் மகள் பேசத் தொடங்கியதும் என்ன நடந்தது? கந்தர்வன் கூற்றாகவே கேட்போமே! அப்பாவுக்கு கால் நடுங்கியது. உதடு கோணியது. "போதும் போதும். பேச்சை நிறுத்து என்று அதற்கும் மேல் அந்தப் பொம்பிளை பேசப்போவதைப் பதறிப் போய் நிறுத்தினார்........ தலையைச் சாய்த்துக் குனிந்து நடந்து வீடுவந்து சேர்ந்தார். அதற்கப்புறம் அப்பா ஆள்பத்தி அறைக்குள் நுழைந்து பெட்டியைத் திறந்து சாசனம் எதையும் எடுத்துப் பார்க்கவே இல்லை".

கதை முடிந்தது. உயிருள்ள சாசனம் வாய் திறந்த பின்னர் எழுத்து வடிவிலான சாசனம் மதிப்பற்றுப் போனது.

தொடர்புக்கு: 9442053606

6 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆழ்குழாய் பதிப்பதற்காக துளைகள், வழித்தடங்கள் அமைப்பதற்காக குழிகள் தோண்டும்போது பெரும் நில அதிர்வு ஏற்படும். இப்பணிகளின் போது வெளியாகும் சக்தி வாய்ந்த ஒலி, ஒளியால் கடலின் இயல்பு நிலையில் மாற்றம் ஏற்படக்கூடும். ஹைட்ரோ கார்பன் எடுக்கும் போது, அவற்றுடன் ஆழ்கடலில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேல் படிந்துள்ள நச்சு வாயுக்களும் வெளியேறும். இதனால் கடல்நீர் நச்சுத்தன்மை அடைந்து, கடல்வாழ் உயிரினங்களுக்கும் மனிதர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் போது வெளிவரும் கழிவு மணல் முழுவதும் அகற்றப்படாமல், கடலிலேயே மீண்டும் கொட்டப்படும். வேதிப்பொருள்களுடன் கூடிய இந்த மண், அரிய வகை பவளப் பாறைகளை அழித்துவிடும். கடல் நீர் மாசடைவதால் மீன்கள், இறால், நண்டு மற்றும் அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் அழியும். மீனவர்களின் வாழ்வாதாரம் முடங்கிவிடும்.

இப்பகுதியில் உள்ள 180 மீன்பிடி துறைமுகங்களில் 1,900 விசைப்படகுகள், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள், வல்லம் போன்றவற்றின் மூலம் மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். நாள் ஒன்றுக்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் மீன் வர்த்தகம் நடைபெறுகிறது. 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. இவை அனைத்தும் முடக்கப்பட்டுவிடும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும், மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோள காப்பகத்துக்கும், அரிய வகை பவளப் பாறைகள், கடற்பசுக்கள் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்களுக்கும் பேராபத்தை ஏற்படுத்தும் இந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும். தமிழ்நாட்டின் நிலப்பகுதிகளிலும் கடற்பரப்பிலும் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான ஏல அறிவிப்புகள் ஏற்கனவே விடுக்கப்பட்டு, தமிழக மக்களின் கடும் எதிர்ப்புக்கு பின்னர் நிறுத்தப்பட்டன. அதுபோன்ற நிலைமை மன்னார் வளைகுடா ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கும் ஏற்படுவதற்கு முன்னரே, அப்பகுதியின் முக்கியத்துவம் கருதி ஒன்றிய அரசே கைவிட வேண்டும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தை செயல்படுத்தும் முன்பு தமிழ்நாட்டு அரசிடம் ஒன்றிய அரசு கருத்துக் கேட்கவோ ஆலோசனை நடத்தவோ இல்லை என்பதுதான் பெரும் சோகம்.

தொடர்புக்கு: 9500001224

## ராமர் பாலம் பாதிக்காதா?

சேது கால்வாய் திட்டம் கொண்டுவந்து நிறைவேற்றும் போது, ராமர் நடந்து சென்ற பாலத்தை அழிப்பதா? என்று இந்துத்துவ வாதிகள் கூக்குரலிட்டனர். உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இதனால் சேது கால்வாய் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டன. மோடி அரசு வந்தவுடன் சேது கால்வாய் திட்டம் முடக்கப்பட்டது. தற்போது ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்காக மன்னார் வளைகுடா பகுதியை கார்ப்பரேட்டுகளுக்கு ஏலம் விடுகின்றனர். இப்போது



அவர்களின் கண்களுக்கு ராமர் பாலம் தெரியவில்லை. ராமர் நடந்துசென்ற வழி பாதிக்கும் என்று கூக்குரலிடவில்லை.

(கடலில் உருவாகும் மணல் திட்டுகளை ஆங்கிலத்தில் பிரிட்ஜ் (Bridge) என்று கூறுவர். மணல் திட்டுகள் உள்ள இந்தப் பகுதியை ஆதம் பிரிட்ஜ் என்று ஆங்கிலேயர் அழைத்தனர். அதனைத்தான் ஆதம் பாலம் என்று ஆவணங்களும், ராமர் பாலம் என்று இந்துத்துவ வாதிகளும் கூறுகின்றனர்.)

# இருமொழி இழப்பிலும் மும்மொழி முன்னேற்ற



மே.து.ரா.

**1960களின் இரு மொழிக் கொள்கை, தற்போது காலம் கடந்ததாகிப் பொருத்தமின்றிப் போய்விட்டது என்றும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படும் மும்மொழிக் கொள்கையினை இப்போது ஏற்கவேண்டும் என்றும் பா.ச.க. தலைவர்கள் கூறிவருகின்றனர்.**

அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 75 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த நீண்ட நெடிய பயணத்தில் இந்தி பேசாத மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இந்தி மொழி வளர்த்தெடுக்கப்பட்டுள்ளதா, மேன்மைப்பட்டுள்ளதா? என்றால் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது.

### இந்தி அறிவு மொழியாகவில்லை

முதல் உலகப் போருக்கு முன்னரே சப்பானிய மொழி வளர்ச்சிப் போக்கில் காலடியெடுத்து வைத்துவிட்டது. ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் விடுதலை பெற்ற சீனாவும் கொரியாவும் ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டுகளில், அறிவியல் மற்றும் நுட்ப அளவில் மட்டுமல்லாது, உற்பத்தியிலும் பெரும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தினையும் கண்டுள்ளன. இன்று உலகில் நிலவும் அறிவியல், தொழில்நுட்ப அறிவுனைத் தரக்கூடிய மொழிகளின் பட்டியலில் சீன, கொரிய மொழிகள் இடம்பெற்றுவிட்டன.

ஆனால், சீன, கொரிய மொழிகளுக்குக் கிடைத்த அதே வாய்ப்பும் சூழலும் பேணுதலும் போற்றுதலும் கிடைத்திருந்தும், ஒன்றிய அரசின் அளவு கடந்த பொருளுதவி வாய்ப்புகள் பெற்றிருந்தும், கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் இந்தி மொழி அத்தகையதொரு அறிவு மொழியாக மேம்படுத்தப்படவில்லை.

ஆங்கிலம், ரசியன் செர்மன், பிரெஞ்சு ஆகியவற்றைப் போல சப்பானிய, சீன, கொரிய மொழிகளும் இன்று அறிவுச் செல்வங்களைப் பெற்றுத் திகழ்கின்றன. வெவ்வேறு அறிவுத் துறைகளின் வளர்ச்சியில் சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அந்தந்த நாட்டு மக்களுக்கு உயர்கல்வி தருகின்ற வகையிலும் ஆய்வுகளை முன்னெடுக்கும் அளவிலும் அந்த மொழிகள் வளம் கண்டுள்ளன. இதனாலேயே, புதிய கண்டுபிடிப்புகளும் அந்த நாடுகளிலிருந்து உருவாகின்றன.

ஆயினும், அரசியல், வணிகம் படை, வலிமை, மனித வளம், உற்பத்தித் திறன், நுட்ப அறிவு, புதிய கண்டுபிடிப்புகள் போன்ற பல்வேறு காரணிகளால் ஆங்கிலம், ரசியன், சீனம் ஆகிய மொழிகள் இன்று முன்னிடம் பெற்றுள்ளன என்பதை மறுப்பாரில்லை.

இன்று உலகத் தொடர்புக்காக மட்டும் அல்லாது, உலகம் பெற்றுள்ள அறிவுத் துறைகள், நுட்ப முன்னேற்றங்கள், கண்டுபிடிப்புகள் ஆகிய அனைத்தையும் பெற,இந்தியஒன்றியத்தில்உள்ள அனைத்து இன மக்களுக்கு அத்தகையதொரு மொழி வேண்டப்படுகிறது. எதிர்பாராமல், வரலாற்றுக் காரணிகளால், ஏற்கெனவே இந்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள இன மக்களுக்கு அறிமுகமாகிவிட்ட ஆங்கிலம் இன்றைக்குத் தவிர்க்க இயலாததாக நிலைபெற்றுவிட்டது. இதற்கு மாற்றாக வேறொரு இந்திய மொழியினை முன்னிறுத்துவதற்கான சூழல் இப்போதைக்கு இல்லை என்பதையும் புறக்கணித்துவிட முடியாது.

மக்களை அடிமைப்படுத்திய மொழி என்று ஆங்கிலத்தை மறுக்க முயன்றாலும், ரசியன், சீனம் போன்ற வேற்று நாட்டு மொழியொன்றினைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கும். இந்தி உள்ளிட்ட, தமிழ் உள்ளிட்ட இந்திய மொழி ஏதாவதொன்று ஆங்கிலத்தின் இடத்தை இட்டுநிரப்பக்கூடிய அளவுக்கு இன்று மேம்படவில்லை மேம்படுத்தப்படவில்லை என்பதையும் ஒதுக்கிவிட இயலாது.

### வாய்ப்பிருந்தும் இந்தி வளரவில்லை

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 351, இந்தி மொழியின் பரப்பலுக்கான பணிகளை மேற்கொள்ளும் கடமையை ஒன்றிய அரசுக்குத்தான் தந்திருக்கிறது. இந்திய ஒன்றியத்தின் பல்வேறுபட்ட கூட்டுப் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகச் செயல்படவும் வாய்ப்பளித்திருக்கிறது. இவ்வாறு முழு உரிமை தரப்பட்டிருந்தும், எத்தகைய முன்னேற்றத்தையும் ஒன்றிய அரசால் செயல்படுத்த முடியவில்லை. இந்தியைத் திணிக்க எடுத்துக்கொண்ட அனைத்து முயற்சிகளும் வீணாயின என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தி பேசாத மாநிலங்களில் இருக்கும் ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்களின் அலுவலகங்களில் இந்தியைப் பயன்படுத்த முயல்வது, ஒன்றிய அரசு நிறுவனங்களின் விண்ணப்பங்களை இந்தியில் அச்சிடுவது, தேர்வுகளை ஆங்கிலத்துடன் இந்தியிலும் நடத்துவது, நாடாளுமன்றத்தில் பேசுவது, வானொலிதொலைக்காட்சி ஊடகங்களில் பயன்படுத்துவது, சட்டங்கள், திட்டங்கள், தொடர்வண்டிப் பெயர்கள் என்பன போன்ற இன்னும் பல வழிகளில் ஊடுருவல் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இத்தகைய மேலோட்டமான செயல்பாடுகள் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளுக்குக்கூடப் பொருத்தமில்லாதவை. அறிவியல் நுட்ப வளர்ச்சியின் உயர்நிலைப் பயன்பாடுகளால் இயங்கிக்கொண்டிருக்கும் இன்றைய உலகில், ஒவ்வொரு அசைவும் நுட்பத்தினைத் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது. அதற்கேற்ற அறிவையும் ஆற்றலையும் ஆக்கத்தையும் திறனையும் கற்றலையும் தரக்கூடிய மொழியொன்று ஒவ்வொருவருக்கும் வேண்டப்படுகிறது. அத்தகைய அறிவு மொழியின் இடத்தை அலுவல் மொழியாக மட்டும் இருப்பதாக நம்பப்படும் இந்தியால் பெறமுடியவில்லை; பெறமுடியாது என்பதுதான் நடைமுறை உண்மை.

குறுகிய காலத்தில் அறிவு மொழியாக மேம்பட்ட சீனம் அல்லது கொரிய மொழியினைப் போல ஏன் இந்தி செழுமைப்படுத்தப்படவில்லை என்பது வியப்பாகவே இருக்கிறது. அதற்கான தொடக்க முயற்சிகள்கூட மேற்கொள்ளப்படவில்லை.

இந்தி ஏன் பல்லாண்டுகளாக மேம்படுத்தப்படவில்லை என்பதற்கான பின்புலத்தை அறிவது, இந்த இடத்தில் முழுமையான தெளிவைத் தரும்.

### சமக்கிருதத்தைப் புகுத்தும் முயற்சி

அலுவல் மொழிக்கு வேண்டிய வளத்தினை இந்தி பெற, சமக்கிருதத்தில் முதன்மையாகவும் பிற மொழிகளில் அடுத்ததாகவும் சொற்களை எடுத்துக் கொள்ளலாம்என்று அரசமைப்புச்சட்டத்தின் பிரிவு 351 மேலும் வற்புறுத்துகிறது. இந்த இடத்தில் சமக்கிருதத்தைத் தனித்துச் சுட்டிக்காட்டியிருப்பதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகவே தெரிகிறது.

சமக்கிருதத்தைத் தேசிய மொழியாக ஏற்கவேண்டுமென்ற வலியுறுத்தல் அன்று அரசமைப்பு அவையிலிருந்த சில பண்டிதர்களிடமிருந்து வந்திருந்தாலும், வலுத்த எதிர்ப்புகளால் இது நடக்கவில்லை. இருப்பினும், சமக்கிருதத்துக்குத் தனித்துவம் இருப்பதாக காட்டிக் கொள்வதற்காக, 351ஆவது பிரிவில் சமக்கிருதத்தை எப்படியோ நுழைத்துவிட்டனர்.

அவர்களது நோக்கம் வெளிப்படையானதுதான். நாளடைவில், இந்திக்கு அலுவல் மொழியாகும் தகுதியில்லை என்பதை உறுதிப்படுத்தி, சமக்கிருதத்தை அந்த இடத்தில் முன்னிறுத்தி, அமர்த்திவிடலாம் என்று கனவு கண்டனர்.

இதனால்தானோ என்னவோ, அப்பொழுதெல்லாம் அமைச்சரவையிலும் ஆட்சி மேலாண்மையிலும் செல்வாக்குப் பெற்றிருந்த சமக்கிருதப் பற்றாளர்களான சனாதனப் பார்ப்பனர்கள், இந்தி மொழி வளர்ச்சிக்கான முழுமையான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவில்லையோ என்ற அய்யம் எழுகிறது. இது பிற மொழிகளைப் புறக்கணித்துத் தேக்கத்தில் நிறுத்தியதற்கும் பொருந்தலாம்.

ஆனால், தேர்தல் அரசியலில், இந்தி




வெறியர்களின் எண்ணிக்கையும் எண்ணங்களும் முன்னின்றதால், மிகச் சிறியளவினரான சனாதனிகளின் நோக்கம் நிறைவேறவில்லை. ஆயினும், அவர்களது முயற்சிகள் முடிவுக்கு வரவில்லை. அழுத்தம் தரும் இடத்தில் இருந்துகொண்டு, ராட்ரிய சுயம் சேவக் சங்கத்தினரின் தலைமையில் நாட்டைச் சமக்கிருதவயமாக்கத் திட்டங்களை வகுத்து வருகின்றனர். இதில் இந்தி மொழியும் பலியாகிவருகிறது. இதனைக்கூட இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் புரிந்துகொள்ளவில்லை.

இதோடு சனாதனிகள் நிற்கவில்லை. அலுவல் மொழி என்பதனையடுத்து, பொது மொழி, தேசிய மொழி, தொடர்பு மொழி, இணைப்பு மொழி, பயிற்சி மொழி, அறிவு மொழி என அனைத்துக்குமான மொழி என்று ஏற்றிவைத்துத் திணித்துவிட முடியும் என எதிர்பார்க்கின்றனர்.

தேசியக் கல்விக் கொள்கையில், காரணியின்றிப் பொருந்தாத இடத்தில், கல்வியமைப்பின் நடுவப்புள்ளியாகச் சமக்கிருதம் செயல்படுமென்று வலியுறுத்தப்படுகிறது. இதனை அப்படியே ஒதுக்கிவிட்டுச் சென்றுவிட முடியாது. ஏறக்குறைய 138 கோடி மக்கள்தொகை உள்ள இந்திய ஒன்றியத்தில், 24,821 எண்ணிக்கையினர், அதாவது 0.002% மக்கள் மட்டுமே பேசுவதாகக் கூறப்படும் சமக்கிருத மொழிக்கு ரூ. 2345 கோடிகள் கொட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், ஏறக்குறைய ஏழு கோடி மக்கள் பேசும் தமிழ் மொழிக்கு ரூ. 167 கோடிகள் மட்டுமே பெயரளவுக்குத் தரப்படுகிறது.

இவ்வளவு தொகை ஒதுக்கியும், சமக்கிருதத்தை அறிவு மொழியாக வளர்த்தெடுக்க முடியவில்லை. இதற்கும் அடிப்படைகள் இல்லாமல் இல்லை.

ஆன்மீகத்தில் இருந்து அறிவியல் வரை, அறத்திலிருந்து அரசியல் வரை உலகில் உள்ள அனைத்தும் சமக்கிருதத்தில் இருப்பதாக சனாதனிகள் நம்புகின்றனர் அல்லது நம்பவைக்க நினைக்கின்றனர். அதனால், மேற்கொண்டு மேம்படுத்த ஏதும் இல்லையென்ற எண்ணத்தில் இருக்கலாம். பண்பாட்டு மொழியெனக் கற்பித்துக்கொண்டிருப்பதும், வழிபாட்டு மொழியெனக் காட்டிக்கொண்டிருப்பதும் போதுமானது எனவும் துணிந்திருக்கலாம்.

ஆனால், உண்மை வேறானது. பேசும் மொழியாக, பயன்பாட்டு மொழியாக, இல்லாத சமக்கிருதத்தை அறிவு மொழியாக்குவது என்பது, உயிரற்ற உடலுக்கு உணர்வூட்ட முயற்சிப்பதுதான். மெத்தப் படித்தோராகத் தங்களைக் கருதிக்கொள்ளும் சனாதனிகளுக்கு இவையெல்லாம் தெரியாதா அல்லது தெரிந்தும் நடத்தும் நாடகமா? இன உணர்வுகளை முன்வைத்துத் தங்களது மேனிலையை மொழி வழியாக உறுதிப்படுத்திக்கொள்ளும் முனைப்பில் இத்தகைய முன்மொழிவுகளை

## இன்றைய வேண்டல் அறிவு மொழிதான்

இந்திய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள அனைத்து இன மக்களுக்கும் பயன் தரும் வகையில், இன்றைய அறிவியல், தொழில்நுட்பத் தேடல்களுக்கு உரிய மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து நீடித்து வருகிறது. உலகின் பிற நாடுகளுடன் தொடர்பு என்பதற்கு மேலாக, மனித இனம் பெற்றுள்ள கண்டுபிடிப்புகளையும் முன்னேற்றங்களையும் அறிவுச் செல்வங்களையும் தெரிந்துகொள்ள ஏதாவதொரு மொழி வேண்டியுள்ளது. அத்தகையதொரு மேனிலையினை இதுவரை இந்தியோ அல்லது தமிழ் உள்ளிட்ட வேறோர் இந்திய மொழியோ பெறவில்லை என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டும்.

உலகின் பல நாடுகளுக்கு விடுதலையும் தன்னாட்சி உரிமையும் பெற்றுத் தந்த இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஆங்கிலம், ரசியன், செர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளே பெரிதும் அறிவுமொழிகளாக விளங்கின. பண்டைப் பெருமை கொண்டிருந்த தமிழ், சீனம், பாரசீகம், கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகள், குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர், புதிய வேண்டல்களுக்கு ஏற்பப் புதுப்பிக்கப்படவில்லை; வளர்த்தெடுக்கப்படவில்லை. வெவ்வேறு காரணிகளால், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் ஈடுகொடுக்குமளவில் அவை வளப்படுத்தப்படவில்லை. பல நாடுகளைக் கைப்பற்றியிருந்தும், இசுபெயின், போர்ச்சுக்கல் போன்ற நாட்டினரும்கூடத் தங்கள் மொழிகளை அடுத்தடுத்த கட்டங்களுக்குக் கொண்டு செல்லவில்லை.

# ...ம் தள்ளவில்லை ...மும் தரவில்லை




மேற்கொள்கின்றனர். ஆனால், களமும் காலமும் மாறிவிட்டதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இதனால் ஏற்படும் இழப்புகளும் பின்னடைவுகளும் தேக்கத்தை ஏற்படுத்தி, நீண்ட கால முடக்கத்துக்கு வித்திடுகின்றன என்பதால்தான் தமிழகம் பொங்கி எழுகிறது.

### படிப்பதால் பயனில்லாத இந்தி

உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும், அறிவு மொழி ஒன்றினை ஏற்றுக்கொள்ளவேண்டிய அழுத்தம் இப்போது இருக்கிறது. அலுவல் மற்றும் தொடர்புக்கு அந்தந்த நாடுகளின் தேசிய மொழிகள் அல்லது தாய்மொழிகளாக விளங்குவன பயன்படுத்தப்பட்டாலும், அத்தகைய மொழிகள், அறிவு மொழிகளில் ஒன்றாக அமையாது போனால், அறிவுச் செல்வங்களைப் பெற வேறொரு மேம்பட்ட அறிவு மொழி இன்றியமையாததாகிறது. இதனை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டுதான் பின்பற்றிவருகின்றன. இந்தி அல்லது சமக்கிருதத்தைத் திணிக்க நினைப்போருக்கு மட்டும்தான் இதில் குழப்பம்.

இந்தி பேசும் மாநிலங்களுடன் இந்தியில் தொடர்புகொள்ளும், ஒன்றிய அரசு, இந்தி பேசாத மாநிலங்களுடன் ஆங்கிலத்தில் தொடர்புகொள்ளும் நடைமுறை இன்னும் நீடிக்கிறது. அதாவது, அலுவல் மொழியாக ஆங்கிலம் இன்று வரை தொடர்கிறது.

இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாகச் சொல்லப்பட்டிருந்தாலும், அலுவல் மொழி என்ற அளவிலும் இந்தியால் முழுமையாக நடைமுறைக்கு வர முடியவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஆங்கிலமே பெரிதும் அலுவல் மொழியாக மட்டுமல்லாது இணைப்பு மொழியாகவும் வேறு மாற்றின்றித் தொடர்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

பல தேசிய இனங்கள் வாழும் மொழிவழி மாநிலங்களின் ஒன்றியமாகத் திகழும் இந்தியாவை இணைக்க, அலுவல் மொழி ஒன்றினால் மட்டும் இயலாது என்னும் அடிப்படையை இன்று வரை இந்தியை முன்னிறுத்துவோர் எவரும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அந்த அலுவல் மொழி, அறிவு மொழியாகவும் இருந்தால்தான் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். ஏற்றுக்கொள்வது ஒருபுறம் இருக்கட்டும், அது பயன் தருவதாகவும் இருக்கவேண்டும். எதற்கும் பயனில்லாத இந்தி அல்லது வேறொரு இந்திய மொழியினைத் தாய் மொழி அல்லாதார் ஏன் படிக்கவேண்டும்? இந்த ஒரு வினாவுக்குத் தரும் காரணிகள் எதுவுமே பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், அறிவு மொழியாக வளத்திலும், அலுவல் மொழியாகப் பயன்பாட்டிலும் ஆங்கிலம் தொடரும்போது, தாய் மொழிக்கு அப்பால், இந்தி என்ற மூன்றாவது மொழிக்கான வேண்டல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தி பேசாத மக்களின் அன்றாட வாழ்வில் இந்தி எத்தகையதொரு பங்களிப்பையும் எப்போதும் வழங்கவில்லை.

இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமென்றால், ஆங்கிலேயரது காலத்தில் அலுவல் மொழியாக ஆட்சியிலும், இணைப்பு மொழியாகப் பகிர்தலிலும், தொடர்பு மொழியாக ஊடகங்களிலும், வழக்காடு மொழியாக நீதிமன்றங்களிலும், அறிவு மொழியாகக் கல்வியிலும், முழுமையாக ஆங்கிலம் குடியேறி விட்டது என்பதை மறுப்பார் எவரும் இல்லை.

அடிமைப்படுத்தியிருந்த நாட்டின் மொழியாக ஆங்கிலம் பார்க்கப்பட்டாலும், அடிமை நீக்கத்துக்கான பல்வேறு இன மக்களின் பகிர்தல்களுக்கும் புரிதல்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும் போராட்டங்களுக்கும் ஆங்கிலமே துணை நின்றது என்பதையும் மறைப்பதற்கில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் இந்தி அலுவல் மொழியாக அமைந்ததை நோக்கவேண்டும். அலுவல் மொழி என்ற அளவில் மட்டுமே ஆங்கிலத்துக்கு முழு மாற்றாக இந்தி அமைந்துவிட முடியாது என்பதில் இந்தி பேசும் மக்களுக்குத் தெளிவான புரிதல் இருக்கவில்லை.

தமிழ்நாடு மட்டுமல்லாது, இந்தி பேசாத பிற அனைத்து மாநிலங்களுக்கும் இது முற்றிலுமாகப் பொருந்தும்.

### இருமொழிகளின் காலம் மாறவில்லை

அறிவுக்கு ஆங்கிலம், அலுவலுக்கு இந்தி என வேறுபடுத்திப் பயன்படுத்தும் வளர்ச்சி அல்லது சூழல் ஏற்படாதபோது, எதற்காக இந்த இரண்டு மொழிகளையும் பிறர் படிக்கவேண்டும் என்ற வினா எழுகிறது. அறிவு, அலுவல், தொடர்பு போன்ற அனைத்துக்கும் இப்போது ஆங்கிலமே பெரிதும் பயன்படுகிறது என்பதால்தான் இந்தி வேண்டியதில்லை என்ற முடிவு வருகிறது. இதன் விளைவுதான், தமிழ்நாட்டில் தாய்மொழியான தமிழுடன் ஆங்கிலம் மட்டும் போதும் என்னும் இயல்பான இரு மொழிக் கொள்கையின் தேர்வு அமைந்தது.

இந்தி பேசாத பிற மாநிலங்களுக்கு இத்தகைய நடைமுறை உண்மை தெரிந்திருந்தாலும், அரசியல் தெளிவும் புரிதலும் சமூகப் பார்வையும் இல்லாததால், தொடக்கத்தில் மும்மொழிக் கொள்கையை ஒப்புக்கொண்டுவிட்டன.

இந்த மாநிலங்களில் வாழும் அனைத்துப் பிரிவு மக்களும் இந்தியைப் பயன்படுத்தும் நிலையினை எட்டிவிட்டார்கள் என்று கூறிவிட முடியாதுதான். மிகச் சிலர் பேசுவதைப் புரிந்துகொள்ளவும் பேசவும் தெரிந்திருக்கலாம். எழுதவும் படிக்கவும் முடிகின்ற நிலை எல்லோருக்கும் ஏற்படவில்லை. பள்ளியில் படித்த பின் மறந்துவிடுகின்ற நிலையிலேயே பெரும்பாலானோர் நீடிக்கின்றனர் என்பதுதான் உண்மை. இப்போது சற்று விழிப்புணர்வு தோன்றியுள்ளதால், தமிழகத்தைப் போல அவர்களும் இந்தித் திணிப்பை எதிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தித் திணிப்பை எதிர்க்கும் போராட்டங்களும் அவ்வப்போது பல மாநிலங்களில் எழுகின்றன.

இரு மொழிக் கொள்கையால் தமிழர்கள் இருட்டிலும் கிடக்கவில்லை; மும்மொழி பயில்வதால் மற்றோர் முன்னேற்றமும் காணவில்லை.

எனவே, 1960களின் இரு மொழிக் கொள்கை காலம் கடந்து பொருத்தமற்றுப் போய்விடவில்லை. இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால், மேலும் பொருந்துவதாக மெருகேறியிருக்கிறது. மாறாக, இன்றைய அறிவுநுட்ப வளர்ச்சியில் மும்மொழிக் கொள்கையான இந்தித் திணிப்புத்தான் காலத்தைத் தவறவிட்டுப் பொருத்தமற்றதாக மாறிவிட்டது.

**தொடர்புக்கு : 9444075561**

# ஈரோட்டில் பல்கலைக்கழகம் ஏற்படுத்த வேண்டும்



த.ஸ்டாலின் குணசேகரன்

ஈரோடு நகரில் தமிழ்நாடு அரசு புதிய பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதற்கான சூழலும் தேவையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 27 கலை, அறிவியல் கல்லூரிகள் தற்போது உள்ளன. சமீபத்தில் அரசு கல்லூரியாக அறிவிக்கப்பட்டுள்ள சிக்கய்ய நாயக்கர் கல்லூரியுடன் சேர்த்தால், மொத்தம் ஆறு அரசு கல்லூரிகள் இம்மாவட்டத்தில் இருக்கின்றன. நான்கு அரசு உதவி பெறும் கல்லூரிகள் செயல்படுகின்றன. மற்றவை தனியார் கல்லூரிகள்.

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி தொடங்கி 70 ஆண்டுகள் ஆகின்றன. 1954 இல் தொடங்கப்பட்டது. சமீபத்தில் சில கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 50 ஆண்டுகள் கடந்த கல்லூரிகளும் உள்ளன.

எல்லாக் கல்லூரியிலும் மாணவர் சேர்க்கை சிறப்பாக உள்ளதோடு, ஈரோடு மாவட்டம் உயர்கல்வியில் தனித்துவம் மிக்கதாக விளங்கி வருகிறது.

பல்கலைக்கழகங்களில் முதுகலை மற்றும் ஆய்வு பாடங்கள் மட்டுமே உண்டு. இத்தனை கல்லூரிகளில் பயிலும்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு, முதுகலை பட்டங்கள் பெறுவதற்கும், எம்.பில் மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் பல்கலைக்கழகங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இத்தகைய கல்வி வளர்ச்சியைக் கணக்கெடுத்து தமிழ்நாடு அரசின் அரசாணைப்படி, 2013 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம் ஈரோட்டில் தொடங்கப்பட்டது. இம்மையத்தில் இந்தக் கல்வியாண்டில் இங்கு செயல்பட்டுவரும் ஆறு பாடங்களிலும் சேர்த்து 173 மாணவர்கள் படித்து பயன்பட்டு வருகின்றனர்.

இந்த விரிவாக்க மையங்கள் தான் காலப்போக்கில் சூழல் கனிந்து வந்த பின்னர், பல்கலைக் கழகங்களாகப் பரிணாம வளர்ச்சித் பெறும். அவ்வாறுதான் முன்பு சென்னை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் கோவையில் செயல்பட்டு வந்து, ஒரு கட்டத்தில் பாரதியார் பல்கலைக் கழகமாக அறிவிக்கப்பட்டது.

அவ்வாறு உள்ள நிலையில், தற்போது ஈரோட்டில் செயல்பட்டு வரும் விரிவாக்க மையத்தில், வரும் கல்வியாண்டில் இருந்து மாணவர் சேர்க்கை நிறுத்தப்படும் என்றும், இம்மையமே மூடப்படும் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

பல்கலைக்கழகங்களே கல்வி விடிவெள்ளிகள். வருமானத்தைக் கணக்கிட்டு எடுக்கப்படும் முடிவுகள் பல்கலைக்கழகங்களுக்குப் பொருந்தாது.

மாணவர்கள் சேர்க்கை குறைவு என்ற காரணம் கூறப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் ஈரோட்டில் செயல்பட்டு வரும் செய்தியையும், அவ்வாறு பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கு கிடைக்கும் தனித்தன்மை மிக்க சிறப்புகள் என்னென்ன என்பதையும், அனைத்து கல்லூரிகளில் பயிலும், அனைத்து பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் முறையாக சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்டால் இல்லை என்பதே பதிலாக உள்ளது.

மாணவர் சேர்க்கை குறைவு என்றால், சேர்க்கையை அதிகரிக்க என்னென்ன வழிகளைப் பின்பற்றலாம் என்று ஆக்கபூர்வமாக சிந்திக்கலாமே தவிர, மையத்தை மூடுவது தீர்வாகாது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு உயர்கல்வியில் முன் வரிசையில் உள்ளது. அந்த நிலையை அடுத்தடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செலவே அனைத்து தரப்பினரும் முயல வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளாக புத்தகத் திருவிழாவை நடத்துவது, ஆண்டுதோறும் பாரதி விழாவை 27 ஆண்டுகளாக நடத்துவது, 15 ஆண்டுகளாக தேசிய அறிவியல் தினத்தைநடத்துவது, ஆண்டுதோறும் ஆசிரியர் பாராட்டு விழா நடத்துவது என கல்வி சார்ந்த, அறிவு சார்ந்த பணிகளை இடைவிடாமல் தொடர்ந்து மேற்கொண்டு வரும் மக்கள் சிந்தனை பேரவை போன்ற சமூக நல அமைப்புகள். பல்கலைக்கழக உருவாக்கத்திற்கும், அதற்கு முன்பு விரிவாக்க மைய மேம்பாட்டிற்கும் முழு ஒத்துழைப்பு நல்கிட தயாராக உள்ளது.




பல்கலைக்கழகங்கள் சமூகத்தின் முதுகெலும்புகளாக பல நாடுகளிலே செயல்பட்டு வருகின்றன. அங்கு உண்மையான, ஆழமான, சமூக நலன் பயக்கிற பலவித ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும். அந்த ஆராய்ச்சிகள் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கிட வேண்டும்.

ஏழை, எளிய மாணவர்கள், ஊக்கத்தோடு படிக்கிற தனித்திறன்கள் மிக்க ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஈரோட்டில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால் மிகவும் பயன்பெறுவர்.

ஈரோட்டில் செயல்பட்டு வரும் பாரதியார் பல்கலைக்கழக மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையத்தைத் தொடர்வதுடன் மேலும் சிறப்பாக நடத்திட முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

புதிதாக ஒரு பல்கலைக்கழகத்தை ஈரோடு நகரில் தொடங்க வேண்டும். அதற்கான பின்புலமும், வளர்ச்சியும், அவசியமும் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது. அவ்வாறு புதியதாக தொடங்கப்படும் பல்கலைக்கழகம் ஈரோடு மாவட்ட மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், அண்டை மாவட்ட மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக திகழும்.

**தொடர்புக்கு : 9600033318**

பி.சீனிவாசராவ் அவர்களின் மகன்

# பி.எஸ்.ராஜசேகரன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கால தலைவரும், விடுதலைப் போராட்ட வீரருமான பி.சீனிவாசராவ் அவர்களின் மகன் எஸ்.ராஜசேகரன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தமிழ்நாட்டில் அமைக்க முன்முயற்சி எடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் தியாக சீலர்

பி.சீனிவாசராவ் மற்றும் ஆசிரியர் நாச்சாரம்மாள் தம்பதியரின் மகன் எஸ்.ராஜசேகரன். இவர் புரசைவாக்கம் பகுதியில் கேபிள் டிவி தொழில் நடத்தி வந்தார். உடல் நலம் பாதிக்கப்பட்டதால் 17.03.2025 அன்று மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார் என்பது பெரும் துயரமாகும்.

காலமான எஸ்.ராஜசேகருக்கு, பிரேமலதா, சுமதி என இரண்டு சகோதரிகளும், வாழ்விணையர் பொன்னி, மகள் மிருதுளா சிந்து, மகன் அமிர்ருத் ஆகியோரும் இருக்கிறார்கள். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# எழுத்தாளர் இரா.நாறும்பூநாதன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரங்கல்



முன்னணி எழுத்தாளர் இரா.நாறும்பூநாதன் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் முன்னோடியும், முன்னணி எழுத்தாளருமான இரா.நாறும்பூநாதன்(64) 16.03.2025 அன்று காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

தூத்துக்குடி கழுகுமலையில் பிறந்த நாறும்பூநாதன், தமிழாசிரியாகப் பணிபுரிந்த தந்தை இராமகிருஷ்ணன் வழியாக இலக்கிய நூல்கள் வாசிப்பைத் தொடங்கினார். திகசி, வல்லிக்கண்ணன், மேலாண்மை பொன்னுசாமி போன்ற மூத்த தலைமுறை படைப்பாளர்கள் வழியாக ஊக்கம் பெற்று எழுதத் தொடங்கியவர்.

வீடு, குடும்பம் அதற்குள் நிலவும் உறவுகள், பிரச்சினைகள் என்பதையே பெரும்பாலும் களமாகக் கொண்டு படைப்புகளை வழங்கியுள்ளவர்.

வழக்கமான நடைப்பயிற்சியின் போது ஏற்பட்ட மாரடைப்பு தாக்குதல், அவரைப் பறித்துக் கொண்டது. இன்னும் இருபதாண்டுகள் வாழ்ந்து சமூகத்திற்கு நற்சிந்தனைகளை வழங்க வேண்டியவரை இழந்து நிற்பது பெரும் துயரமாகும்.

அவரைப் பிரிந்து வாடும் அவரது வாழ்விணையர் சிவகாமி சுந்தரி, மகன் தீபக் ஆகியோருக்கும், படைப்புலக நண்பர்களுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மருத்துவக் கல்வியும் மாநில உரிமையும் கருத்தரங்கில் நூல் வெளியீடு



மருத்துவக் கல்வியும், மாநில உரிமையும் கருத்தரங்கமும், தாய்மொழி அடிப்படையிலான மருத்துவக் கல்வியின் பயன்கள் சிறு நூல் வெளியீட்டு விழா மற்றும் தமிழ்நாடு அரசின் தமிழ்த் தென்றல் திரு.வி.க விருது பெற்ற டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் அவர்களுக்குப் பாராட்டு விழா 16.03.2025 அன்று சென்னையில் நடைபெற்றது.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு நூலை வெளியிட, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின், அகில இந்தியப் பொதுச் செயலாளர் சி.எச்.வெங்கடாச்சலம் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் ஏராளமான அமைப்புகள் பங்கேற்றன.

# உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தெரியாது!

ஒன்றிய அமைச்சர் கைவிரிப்பு



மஹா கும்பமேளாவில் 60 கோடி மக்கள் கலந்து கொண்டதாகவும், உலகமே வியந்து நிற்பதாகவும் பிரதமர் மோடி உட்பட, ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் புளங்காகிதம் அடைகின்றனர்.

ஆனால், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது, தகவல்களைப் பராமரிக்கவில்லை என்று உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் பதிலளித்துள்ளார்.

“இதுபோன்ற நிகழ்வுகளில் மதக் கூட்டங்கள் மற்றும் கூட்டத்தை நிர்வகிப்பது ‘பொது ஒழுங்கை’ பராமரிப்பது அனைத்தும் மாநில அரசின் பொறுப்பு. ஒரு மாநிலத்தில் ஏற்படும் எந்தவொரு பேரிடர்களிலும், கூட்ட நெரிசல் உட்பட, எந்தவொரு விசாரணையையும் நடத்துவதும், இறந்த பக்தர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் கீழ் வரும். எனவே, ஒன்றிய அரசு இதுபோன்ற தரவுகள் எதனையும் பராமரிப்பது இல்லை” என்று ராய் கூறினார்.

‘கொள்ளு’ என்றால் அகலத்திறக்கும் குதிரையின் வாய், கடிவாளம் என்றவுடன் சட்டென்று மூடிக் கொள்கிறது.

# சங்க இலக்கியத்தில் வாணிபம் என்னும் பன்னாட்டுக் கருத்தரங்கம்



தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த்துறை மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகங்கை மாவட்டக் குழு இணைந்து சங்க இலக்கியத்தில் வாணிபம் என்னும் பன்னாட்டுக் கருத்தரங்கம் 13.03.2025அன்று கல்லூரியின் பொறுப்பு முதல்வர் மா.பரமசிவம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா.கண்ணதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கரு.முருகன் நோக்க உரை ஆற்றினர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேராசிரியர். சிவேசன் சிவானந்த மூர்த்தி உரை நிகழ்த்தினார். பின்னூட்டக் கருத்தினை முனைவர் மா.ரெத்தினேஸ்வரி, பேராசிரியர் ச.இளங்கோ, பேராசிரியர் சுப.காளிமுத்து, பேராசிரியர் சி.தவமணி ஆகியோர் வழங்கினர். நிறைவில் முனைவர் மு.சு.கண்மணி நன்றி கூறினார்.

# மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் இல்ல திருமண விழாவில் கட்சி நிதி ரூபாய் பத்தாயிரம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல் அவர்களின் மகள் வழக்கறிஞர் எம்.லாவண்யா, கே.கபிலன் ஆகியோரின் திருமணம் 9.3.2025 அன்று மதுரையில் நடைபெற்றது. அப்போது கட்சி வளர்ச்சி நிதியாக ரூபாய் 10 ஆயிரம் வழங்கப்பட்டது.

# மறைமலை நகர் விர்கோ பாலிமர் தொழிலாளர்கள் தொடர் போராட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகரில் உள்ள விர்கோ பாலிமர் நிறுவனத்தில் 90 நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் 500 வட மாநில ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி செய்கிறார்கள். இவர்கள் ஏஐடியுசி அமைப்பில் இணைந்து செயல்படுகின்றனர். புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தத்தை உரிய காலத்தில் ஏற்படுத்த வேண்டியும், புலம் பெயர் தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வேண்டியும், தினந்தோறும் ஆலைவாயில் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

சங்கச் செயலாளர் வி.குமரவேல் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர், மாநிலச் செயலாளர் வி.ஆதிமூலம், உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் ஆர்.தேவராஜன், மாவட்ட அமைப்பு நிலைச் செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாசிசத்தின் ஆழம்

எவ்வளவு ஆழம் சென்றுள்ளது பாசிசம்....இதோ ஒரு சிறிய உதாரணம்...

சென்னையில் இயங்கும் தனியார் பள்ளி ஒன்று தங்களின் மாணவர்களை எப்படி ‘தயார்’ செய்கிறது பாருங்கள்.

இந்தியாவின் பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய கட்டுரை எழுதச் சொல்கிறது (PROJECT WORK). அதில் குறிப்பாக இஸ்லாமியர்களின் புராதனச் சின்னங்கள் பற்றி எழுதக் கூடாதாம்...என்னே ஒரு வன்மம்..? மதவெறி?

தளிர்களின் சிந்தனையில் இப்படி அபாயகரமான ஓர் எண்ணத்தைத் தமிழ்நாட்டுத் தனியார் பள்ளிகள் திட்டமிட்டுச் செய்கின்றன.

அரசியலாக எதிர் கொள்வது ஒரு பக்கம் என்றாலும்... பண்பாடு மற்றும் கல்வித் தளத்திலும் நம் கவனத்தைத் திருப்ப வேண்டும் ..

மதச் சிறுபான்மையினரின் நலன் மட்டுமல்ல, நம் எதிர்கால நலனுக்காகவும் பாசிச சக்தியை அகற்ற வேண்டும்.

இந்தப் பதிவைப் பார்க்கும்... வாசிக்கும் நண்பர்கள் இது போல பல சம்பவங்களைப் பற்றிக் கேட்டிருக்கலாம்... எப்படி இதைத் தடுப்பது ...?

யோசிப்போம்.

– நடராஜன் சிவகுரு

## திருநெல்வேலி எழுச்சி நாள் கருத்தரங்கம்



திருநெல்வேலி எழுச்சி நாளை முன்னிட்டு நெல்லையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி தமிழ்த்துறையும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் இணைந்து நெல்லை எழுச்சி நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்விற்கு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.மகாதேவன் வரவேற்புரை நல்கினார். ஆட்சிக் குழு உறுப்பினர் முகம்மது நவாப் ஹுசேன் முன்னிலையில், கல்லூரி முதல்வர் முனைவர் சே.மு.அப்துல் காதர், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் மு.துர்கா தேவி என்கிற 'ழகரா' எழுதிய மகனதிகாரம் நூலை வெளியிட்டுத் தலைமையுரையாற்றினார்.

ஏஐடியூசி மாநிலத்தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டு சிறப்புரையாற்றினார். கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே. கங்கா, பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், நா.வா.ஆய்வுக்குழு பேராசிரியர். நா.இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நூலாசிரியர் துர்காதேவி ஏற்புரையாற்ற திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் ம.சக்திவேலாயுதம் நன்றியுரை நல்கினார். இந்நிகழ்வை தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் சேக் சிந்தா ஒருங்கிணைப்பு செய்தார்.

◆ தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் திருநெல்வேலி எழுச்சி நாள் நிகழ்வு 13.3.2025 அன்று திருநெல்வேலி வ.உ.சி. மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எல். எஸ்.லட்சுமணன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், வழக்கறிஞர் பிரபாகர் ஆகியோர் வ.உ.சி.சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புரையாற்றினர். பெருமன்ற திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் ம.சக்திவேலாயுதம் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து வ.உ.சி. மணிமண்டபத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் திருநெல்வேலி எழுச்சி நினைவு ஸ்தூபி வைப்பதற்கான கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

## மருத்துவக் கல்வியில் மாநில உரிமை பறிப்பு மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




முது நிலை மருத்துவப் படிப்புகளில் நிறுவன இட ஒதுக்கீட்டை வைத்துக் கொள்ளலாம். ஆனால், வசிப்பிட அடிப்படையில் மாநில அரசுகளுக்கெனத் தனியாக இடங்களை ஒதுக்கீடு செய்து கொள்ளக் கூடாது என உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பைச் சரிசெய்திடும் வகையில், உரிய அரசியல் சட்டத் திருத்தத்தை ஒன்றிய அரசு கொண்டுவர வலியுறுத்தியும், மருத்துவக் கல்வியில் மாநில உரிமைகளை ஒன்றிய அரசு பறிப்பதைக் கைவிடக் கோரியும், சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் சார்பில், 16.03.2025 அன்று சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் த.அறம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் எம்.அஜய் முகர்ஜி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலப் பொருளாளர் டாக்டர் ஜி.இரமேஷ் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் டி.இராஜா துவக்கிவைத்து உரையாற்றினார். இதில், சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான இந்திய டாக்டர்கள் சங்கத்தின் அகில இந்தியச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, ஜனநாயக தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு அரசு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் மு.அகிலன், அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் டாக்டர் ஆர்.சுந்தர், சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் டாக்டர் என்.வெங்கடேஷ், டாக்டர் கு.முத்துக்குமார், தமிழ்நாடு உள்ளுறை மருத்துவர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் எம்.கீர்த்திவர்மன் டி.என்.எம்.எஸ்.ஏ முன்னாள் மாநிலத் தலைவர் டாக்டர் மா.காமராஜ், டாக்டர் தர்மலிங்கம், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டுப் பிரிவு அமைப்பாளர் எஸ்.வசந்த் பிலிப் அபிஷேக், மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் கார்த்திக், கே.மதுமிதா, மா.ஆகாஷ், எஸ்.கிஷோர், கே.எஸ்.கார்த்திக் ராஜா, அ.தமிழ், ஜெ.எஸ்.அர்ஷினி, அபிநாத் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து நிறைவு உரையாற்றினார். இதில் 250 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மற்றும் இடைக்கமிட்டி மாநாடுகள்







இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை இடைக் கமிட்டி மாநாடுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

**ஆண்டிபட்டி நகர் கிளை** ஆண்டிபட்டி நகர் கிளை மாநாடு, தா.பாண்டியன் நினைவு அரங்கில் நடைபெற்றது. மூத்த தோழர் க.பாண்டி கொடியேற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எம்.வி.கல்யாண சுந்தரம் ஆகியோர் பங்கேற்றனர். இதில் நகரச் செயலாளராக க.முனீஸ்வரன், நகர துணைச் செயலாளராக க.பழனிச்சாமி, நகரப் பொருளாளராக மு.அன்பு செல்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**துரைச்சாமிபுரம் கிளை மாநாடு:** தென்காசி மாவட்டம் துரைச்சாமிபுரத்தில் கிளை மாநாடு சி.ராஜ் தலைமையில் நடைபெற்றது. எம்.மாரியப்பன் கட்சிக் கொடி ஏற்றினார். ஒன்றியச் செயலாளர் ப.வேலு அரசியல் வகுப்பு நடத்தினார். எம்.வேல்ச்சாமி செயலாளர் எம்.சீனிப்பாண்டி துணைச் செயலாளர் எம். முருகன் பொருளாளர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பிள்ளையார்நத்தம் கிளை:** கோவில்பட்டி தாலுகா பிள்ளையார்நத்தம் கிளை மாநாடு காளீஸ்வரி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் தாலுகா செயலாளர் பாபு, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், தாலுகா உதவிச் செயலாளர் ராமகிருஷ்ணன், பொருளாளர் மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இளையரசனேந்தல் கிளை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோவில்பட்டி தாலுகா, இளையரசனேந்தல் கிளை மாநாடு மாரியம்மாள் தலைமையில் நடைபெற்றது. இதில் தாலுகா செயலாளர் பாபு, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சேதுராமலிங்கம், தாலுகா உதவிச் செயலாளர் ராமகிருஷ்ணன், பொருளாளர் மாரியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**கல்லக்குடி கிளை:** அரியலூர் ஒன்றியம் கல்லக்குடி கிராமத்தில் கட்சியின் கிளை மாநாடு ஆ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. முன்னாள் மாவட்டத் துணைச் செயலாளர் டி.தண்டபாணி கட்சிக் கொடி ஏற்றினார். கிளைச் செயலாளராக ம.பசுபதி, துணைச் செயலாளராக ஆ. பெரியசாமி, பொருளாளராக ஆட்டோ மணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**போல் கல்லக்குடி கிழக்குக் கிளை:** போல் கல்லக்குடி கிழக்குக் கிளை மாநாடு பானுமதி தலைமையில் நடைபெற்றது. செயலாளராக கு.வனிதா, துணைச் செயலாளராக ப.நாகமுத்து, பொருளாளராக க.செல்வி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கொண்டலாம்பட்டி மண்டல மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், சேலம் மாவட்டம் கொண்டலாம்பட்டி மண்டல 4வது மாநாடு, ஏ.லோகநாதன் ஆர்.மோகனரங்கன் ல.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் ப.பரமசிவம் ஏற்றினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் க.பாரதி துவக்க உரையாற்றினார். இதில் மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.ரமேஷ், எஸ்.பி.கே.ராமச்சந்திரன், எம்.பாலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் நிறைவுறையாற்றினார்.

மண்டலச் செயலாளராக ஏ.கந்தன், துணைச் செயலாளர்களாக எஸ்.எல். தங்கமணி, டி.ராமு, பொருளாளராக ஆர்.மோகனரங்கன் ஆகியோர் நிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

**பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய மாநாடு:** பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய மாநாட்டிற்கு ஜெகநாதன் தலைமை வகித்தார். மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் ஒய்.எஸ்.குணசேகரன் ஏற்றி வைத்தார். மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்க உரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் டி.கண்ணன், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் பா.நேதாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டத் துணைச் செயலாளர் எம்.ராமன் நிறைவுறையாற்றினார். மாநாட்டில் ஒன்றியச் செயலாளராக ஜெ.ஸ்டாலின் தேர்வு செய்யப்பட்டார்.

**சேலம் ஒன்றிய மாநாடு:** சேலம் மாவட்டம், சேலம் ஒன்றிய 6வது மாநாடு இ.ரவி, ஏ.ஜோதிபாசு, ஏ.பச்சியப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் கோவிந்தன் ஏற்றி வைத்தார். மாநாட்டை மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் துவக்கி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கந்தன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.பாலன், எஸ்.தீனதயாளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒன்றியச் செயலாளராக எஸ்.பி.கே.ராமசந்திரன், துணைச் செயலாளர்களாக எஸ்.தியாகராஜன், ஜெ.பிரகாஷ், பொருளாளராக இ.ரவி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பெத்தநாயக்கன்பாளையம் நகர மாநாடு:** பெத்தநாயக்கன்பாளையம் நகர மாநாடு, கே.காந்தி, பி.சிவானந்தம், வி.கலியமூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை எம்.தங்கராஜ் ஏற்றி வைத்தார். மாவட்டத் துணைச் செயலாளர் எம்.ராமன் துவக்க உரையாற்றினார். இதில் மாவட்டப் பொருளாளர் டி.கண்ணன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என்.கே.செல்வராஜ், என்.எம்.சடையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் நகரச் செயலாளராக என்.ராகேஷ் தேர்வு செய்யப்பட்டார்.

**சங்ககிரி ஒன்றிய மாநாடு:** சங்ககிரி ஒன்றிய மாநாடு, மாயாபஜார் ஏ.டேவிட் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் ஏற்றி வைத்தார். தமிழரசன் வரவேற்புரையாற்றினார். மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ் துவக்கி வைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தனகோட்டி வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் இரா.ரமேஷ் நிறைவுரையாற்றினார். ஒன்றியச் செயலாளராக சிட்டு(எ) பெஞ்சமின் தேர்வு செய்யப்பட்டார்.

## நெல்லையில் திறந்த வெளி மண்டல மாநாடு




தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளை அமலாக்கத் துடிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து, நெல்லையில் திறந்தவெளி மண்டல மாநாடு மத்தியத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் சார்பில், தொமுச பேரவை அமைப்புச் செயலாளர் ஆ.தர்மன் தலைமையில், நெல்லை மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன், சிஐடியு ஆர்.முருகன், ஐஎன்டியுசி பி.மகாராஜன், எச்எம்எஸ் பி.சுப்பிரமணியன, ஏஐசிசிடியு கே.கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஏஐடியுசி தலைவர் ஆர்.ரெங்கன் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினார்கள். நெல்லை மாவட்ட அனைத்துத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் நிர்வாகிகளும், தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

## கம்பம் நகராட்சியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



கம்பம் நகரில் செயல்படாத கம்பம் நகராட்சியைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், சிபிஐ நகர துணைச் செயலாளர் எ.பாலு அவர்களின் தலைமையிலும் ஏஐஒய்எஃப் ஒன்றியச் செயலாளர் எ.ஜினு முகமது அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை விளக்கி மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எம்.வி.கல்யாணசுந்தரம் அவர்கள் பேசினார்.

ஏஐஒய்எஃப் மாவட்டச் செயலாளர் எம்.வி.கே.மணிகண்டன் அவர்கள் கண்டனக் கோஷங்கள் எழுப்பினார். ஏஐஒய்எஃப் மாவட்டக் குழு உறுப்பினர் எம்.நாட்ராயன், ஒன்றியத் தலைவர் எம்.சாமிக்கண்ணன் ஒன்றிய துணைச் செயலாளர் ஆர்.சக்திராஜா மற்றும் சிபிஐ நகர்க் குழு தோழர்கள் கலந்து கொண்டனர்.

## சாத்தூரில் கார்ல் மாக்ஸ் நினைவு நாள்

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தனுஷ்கோடி ராமசாமி அரங்கில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில், மாமேதை கார்ல் மார்க்ஸ் நினைவுநாளில் அவரது படத்திற்கு மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்யப்பட்டது. கிளைச் செயலாளர் கணேசன் தலைமை வகித்தார். மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம் படத்திற்கு மாலை அணிவித்தார். சிபிஐ மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், வட்டச் செயலாளர் சுவாமிநாதன் ஆகியோர் பேசினார்கள். மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## தென்காசியில் விவசாய சங்கம் ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் சம்பவர் வடகரை, சிவகிரி, ஆழ்வார்குறிச்சியில் விவசாயச் சங்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் வேலாயுதம், சிபிஐ மாவட்டச் செயலாளர் இசக்கித்துரை, மாவட்டப் பொருளாளர் சுப்பையா, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ப.வேலு, பாலசுப்பிரமணியன், மாரியப்பன் பரமசிவன், அந்தோணிராஜ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### பகத்சிங் நினைவு இரத்த தான முகாமில்
## 200 இளைஞர்களைப் பங்கேற்கச் செய்ய ஏஐஒய்எப் முடிவு

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியக் குழு கூட்டம், ஒன்றியத் தலைவர் பி.பிரதாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றியச் செயலாளர் கே.தஷ்ணாமூர்த்தி வேலை அறிக்கை சமர்ப்பித்தார். முன்னாள் தேசியக் குழு உறுப்பினர் க.ஜெகதீசன், மாநிலத் துணைத் தலைவர் மோ. வெங்கடேசன், தேசியக் குழு உறுப்பினர் மு.பார்த்திபன் ஆகியோர் பேசினார். மார்ச் 23 மாவீரன் பகத்சிங் நினைவு தினத்தில், மானம்பதி பகுதியில் 200 இளைஞர்கள் இரத்ததானம் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. ஒன்றியக் குழு உறுப்பினர் பி.புவனேஷ்வரி நன்றி கூறினார்.

### விழுப்புரத்தில்
## என்சிபிஎச் புத்தக நிலையத்தை அமைச்சர் பொன்முடி திறந்து வைத்தார்



விழுப்புரம் புதிய பேருந்துநிலைய நகராட்சி வணிக வளாகத்தில், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய விற்பனை நிலையம் திறப்பு விழா ஏ.வி.சரவணன் தலைமையில் நடைபெற்றது. விற்பனை சீரமைப்பு மேலாளர் ஏ.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார், தமிழ்நாடு அமைச்சர் டாக்டர் க.பொன்முடி புதிய விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார். முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் இரவிக்குமார், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இலட்சுமணன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பி.சரவணன், மாவட்ட ஊராட்சிக் குழு பெருந்தலைவர் என்.ஜெயச்சந்திரன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன், எழுத்தாளர்கள் இரவிகார்த்திகேயன், இராமமூர்த்தி, வழுதரெட்டி ஜெயச்சந்திரன், ஏ.சவுரிராஜன், கே.இராமசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சென்னை மண்டல மேலாளர் எத்திராஜன் மற்றும் கிளை மேலாளர் முருகேசன் நன்றி கூறினார். திறப்பு விழாவையொட்டி பேருந்து நிலையம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

## மழை பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்




தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழு கூட்டம் 15.03.2025 அன்று, தஞ்சாவூரில் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் கே.உலகநாதன் தலைமையில், தஞ்சை மாவட்டச் செயலாளர் சோ.பாஸ்கர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இதில் மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி நடைபெற்ற பணிகள் குறித்துப் பேசினார். கூட்டத்தில் தேசியக் குழு உறுப்பினர்கள் அ.பன்னீர்செல்வம், இரா.முல்லை, மு.மாதவன், மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி, மாநில துணைச் செயலாளர்கள் த.இந்திரஜித், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். தஞ்சை தெற்கு மாவட்ட தலைவர் ஆர்.இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

இதில் நாகப்பட்டினத்தில் வரும் ஏப்ரல் மாதம் 15, 16, 17 நடைபெறும் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 30வது தேசிய மாநாட்டில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்கச் செய்ய வேண்டும், சுவர் எழுத்து, விளம்பரங்கள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் மாநாடு குறித்து பிரச்சாரம் செய்யப்பட வேண்டும்,

கடந்த சில நாட்களாகப் பெய்து வந்த தொடர் மழை காரணமாக சம்பா, தாளடி, பருத்தி, உளுந்து, எள், பாசிப்பயிறு உள்ளிட்ட பயிர்கள் 75 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் கடன் வாங்கி விவசாயம் செய்ததில் பெருநஷ்டம் அடைந்துள்ளனர். பாதிப்படைந்த விவசாயிகளுக்கு உடனடியாக தமிழ்நாடு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

தன்னாட்சி அதிகாரம் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் அமைத்திட வேண்டும், கடல்வளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி ஆழ்கடலில் ஹைட்ரோகார்பன் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும், காவேரி பாதுகாப்பு வேளாண் மண்டலத்தில், வேளாண் துறைகளை அமைத்து வேலை வாய்ப்பு உருவாக்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நிறைந்தது மனம் திட்டத்தின் பயன்குறித்து கேட்டறிந்தார் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர்

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், சீர்காழி வட்டம், தருமகுளம் ஊராட்சி வானகிரி கிராமத்தைச் சேர்ந்த ஆனந்த் என்பவர் குழந்தை அறுவை சிகிச்சைக்காக சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதால், மருத்துவ சிகிச்சைக்காக முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்ட அட்டையை மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் வழங்கி நிறைந்தது மனம் திட்டத்தின் பயன் குறித்துக் கேட்டறிந்தார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா பேரவைக் கூட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா பேரவைக் கூட்டம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

**வத்திராயிருப்பு:** விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு மாத்தூரில் கட்சியின் நூற்றாண்டு விழா பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வட்டச் செயலாளர் கோவிந்தன், விஜோரா ராமதாஸ் ஆகியோர் கட்சியின் வரலாறு குறித்துப் பேசினார்கள். இப்பேரவைக் கூட்டத்தில் மாத்தூர், மகாராஜபுரம், தம்பிபட்டி, டி.கிருஷ்ணாபுரம் மற்றும் ரெங்கபாளையம் கிளைகளின் சார்பில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருமானூர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியப் பேரவைக் கூட்டம், திருமானூரில் ஒன்றியச் செயலாளர் மு.கனகராஜ் தலைமையில், முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஜி.ஆறுமுகம் வரவேற்க, ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஜி. மருதமுத்து, கே.கரும்பாயிரம் முன்னிலையில், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் மு.அ.பாரதி சிறப்புரையாற்றினார். அரியலூர் மாவட்டச் செயலாளர் சொ.ராமநாதன், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் டி. தண்டபாணி, மாவட்டத் துணைச் செயலாளர் ப.கலியபெருமாள் அரியலூர் ஒன்றியச் செயலாளர் து.பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

**பரமக்குடி:** இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில், மூத்த தோழர் கே.கே.கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள், ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் என்.கே. ராஜன், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எஸ்.பி.ராதா, விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கே.ஜீவா, பரமக்குடி நகரச் செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் தமிழ்நாடு அரசின், தமிழ்ச் செம்மல் விருதினைப் பெற்றமைக்காகப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

**சிவகிரி:** தென்காசி மாவட்டம் சிவகிரியில் எம்.கோவிந்தன் தலைமையில், அருணாசலம் முன்னிலையில், மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, நகரச் செயலாளர் பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் க.குருவு, மாவட்டக் குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்புரையாற்றினர்.

**கீழ ஆம்பூர்:** கட்சி நூற்றாண்டு விழா தென்காசி மாவட்டம் கீழ ஆம்பூரில், விவசாயச் சங்கத் தலைவர் கே.சட்டநாதன் தலைமையில் நடைபெற்றது. கட்சி வரலாறு குறித்து ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், அமைப்பாய்த் திரட்ட என்ன செய்ய வேண்டும் என்ற தலைப்பில் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.மோகன் குமாரும் சிறப்புரை ஆற்றினார்கள். இதில் மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, துணைச்செயலாளர் எஸ்.வேலாயுதம், மாவட்டப் பொருளாளர் டி.சுப்பையா. மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஏ.பரமசிவன், எம்.எஸ். கிட்டப்பா, மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.ஈஸ்வரன், கடையம் ஒன்றியச் செயலாளர் எல்.சிவசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**புளியங்குடி:** புளியங்குடியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஒன்றியச் செயலாளர் பா.வேலு தலைமையில், ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், சிபிஐ மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.மோகன் குமார் சிறப்புரையாற்றினார்கள். மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை, டி.சுப்பையா, எஸ்.மாரியப்பன், அந்தோணிராஜ், என்.பாலவினாயர் ஆகியோர் பங்கேற்றனர்.

## ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை உடனடியாக வழங்க ஏஐஒய்எப் வலியுறுத்தல்



அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தருமபுரி மாவட்டக் குழு கூட்டம், மாவட்ட தலைவர் எஸ்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், ஏஐஒய்எப் மாநிலச் செயலாளர் க.பாரதி, மாவட்டச் செயலாளர் எம்.நவீன்குமார், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் கே.மணி ஆகியோர் பேசினார்கள்.

தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும். தருமபுரியில் சிப்காட் தொழிற்பேட்டை பணியை விரைவாகத் தொடங்க வேண்டும். தொப்பூர் உயர்மட்ட மேம்பாலப் பணி, மொரப்பூர்தருமபுரி ரயில் பாதை பணி, இரண்டாம் கட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைத் தொடங்கி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரியில் போக்குவரத்து நெரிச்சலைத் தடுக்கப் புதிய பஸ் நிலையப் பணிகளை விரைவாகத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ரயில்வே மேம்பாலம் அமைத்திட வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் கீழ்பட்டி கிராமத்திலுள்ள ரயில்வே கிராசிங்கில், மேம்பாலம் கட்டும் பணிக்கு முதலமைச்சரால் 2020 21 நிதி ஆண்டில் திட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால், மேம்பாலத்திற்குப் பதிலாக, சுரங்கப்பாதை அமைக்க அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டது. இதற்குக் கீழ்பட்டி ஊராட்சி மக்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். ரயில்வே மேம்பாலம் அமைத்திட வலியுறுத்தி, கீழ்ப்பட்டி கிராம ஊராட்சி மக்கள் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேலூர் மாவட்டக் குழு சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சி.குமார் தலைமை தாங்கினார். கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் எல். மணி, மாவட்ட துணைச் செயலாளர் துரை செல்வம், குடியாத்தம் நகரச் செயலாளர் ஆனந்தன், பேரணாம்பட்டு ஒன்றியச் செயலாளர் பன்னீர்செல்வம், வேலூர் மாநகரச் செயலாளர் ஜீவா, குடியாத்தம் மேற்கு ஒன்றியச் செயலாளர் பிரேம் குமார், தெற்கு ஒன்றியச் செயலாளர் வே.குமார், வேலூர் மாவட்டச் செயலாளர் ஜி. லதா ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

## தஞ்சை ந.இளஞ்செழியன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட முன்னணி தலைவர் பனையூர் ந.இளஞ்செழியன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட முன்னணி தலைவர் பனையூர் ந.இளஞ்செழியன் (46) 16.03.2025 அன்று காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் டாஸ்மாக் மதுபானக் கடையில் விற்பனையாளராகப் பணிபுரிந்து வருகிறார். டாஸ்மாக் பணியாளர்களின் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் போன்ற அடிப்படைக் கோரிக்கைகளுக்காக டாஸ்மாக் பணியாளர்களைத் தொழிற்சங்க அமைப்பில் அணிதிரட்டி முனைப்பாகப் போராடி வந்தவர்.

தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட அமைப்பை உருவாக்கியதில் பெரும் பங்காற்றியவர். கடந்த ஆண்டு 2024 அக்டோபர் 2 ஆம் தேதி தஞ்சாவூரில் டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கை மாநாடு நடத்தியதில் முன்நின்று செயல்பட்டவர். பணியாளர்களின் நன்நம்பிக்கையைப் பெற்று, உயர்ந்து வந்த இளைய தலைமுறை தலைவர், இளஞ் செழியன் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இவரது வாழ்விணையர் வித்யா, தன்யாஸ்ரீ என்கிற மகளும், ஆதவன் என்கிற மகனும் இருக்கிறார்கள்.

தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடி ந.இளஞ்செழியன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## குறைந்தபட்ச ஊதியம் மாதம் 36,000 வழங்க வேண்டும்

**ஏர்போர்ட் தூய்மைப் பணியாளர் சங்க மாநாட்டில் தீர்மானம்**

தமிழ்நாடு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியனின் கிளை அமைப்பான, ஏர்போர்ட் தூய்மைப் பணியாளர் சங்கத்தின் மாநாடு, சங்கத் தலைவர் கே.இரவி தலைமையில் நடைபெற்றது. சங்க துணைத்தலைவர் எம்.மேகநாதன் வரவேற்புரை ஆற்றினார். செயலாளர் மா.வீரன் வேலை அறிக்கையை முன்வைத்தார்.

ஏஐடியுசி தேசிய துணைத்தலைவர் கே.சுப்பராயன் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர், மாநிலப் பொருளாளர் பி.பீட்டர், துணைப் பொதுச் செயலாளர் இரா.துரைசாமி வாழ்த்துரை வழங்கினர். தேசியச் செயலாளர் வகிதா நிஜாம் மாநாட்டை நிறைவு செய்தார். சங்க துணைச் செயலாளர் வி.சதீஷ் நன்றி கூறினார்.

இதில் சங்க கௌரவ தலைவராக கே.சுப்பராயன் எம்.பி, செயல் தலைவராக கே.இரவி, தலைவராக வகிதா நிஜாம், துணைத் தலைவர்களாக எம்.ஜஹாங்கீர், எம்.மேகநாதன், இ.பரமேஸ்வரி, டி.பாரதி, செயலாளராக மா.வீரன், துணைச் செயலாளர்களாக வி.சதீஷ், டி.சந்திரன், டி.திலகவதி, பொருளாளராக சி.பேச்சியம்மாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தூய்மைப் பணியாளர்களாகப் பணி செய்யும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் மாதம் 36,000 வழங்க வேண்டும். ஊதியத்துடன் கூடிய ஆறு மாதப் பேறுகால விடுப்பு வழங்க வேண்டும். மிகுதி நேரம் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சட்டப்படியான மிகுதி நேர ஊதியம் வழங்க வேண்டும் விடுமுறை நாட்களில் வேலை செய்தால் அதற்கு மிகுதி நேர ஊதியம் வழங்க வேண்டும். சங்கச் செயலாளர் மா.வீரன் மீதான சட்டவிரோதப் பழிவாங்கும் நடவடிக்கையைக் கைவிட்டு, உடனடியாகப் பணி வழங்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அகில இந்திய விவசாயிகள் சங்க தேசிய 30வது மாநாட்டு லோகோ வெளியீடு






அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 30வது தேசிய மாநாடு நாகப்பட்டினத்தில் வரும் ஏப்ரல் 15, 16, 17 தேதிகளில் நடைபெற உள்ளது, இந்த மாநாட்டு லோகோ வெளியீடு தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் தலைமையில், கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் முத்து.உத்திராபதி முன்னிலையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வரவேற்புரையாற்ற நடைபெற்றது.

மத நல்லிணக்கத்திற்கு அடையாளமாகவும் டெல்டா விவசாய மண்டலத்தைக் குறிப்பிடும் வகையிலும் அமைந்த இலட்சினையை, தஞ்சாவூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி வெளியிட, சங்க மாநிலத் துணைச் செயலாளர் த.இந்திரஜித் பெற்றுக் கொண்டார். அடுத்து தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சன்.இராமநாதன் வெளியிட விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் வலிவலம் மு.சேரன் பெற்றுக் கொண்டார்கள். மாநாட்டு வரவேற்புக் குழு பொருளாளர் சிவகுருபாண்டியன் அவர்கள் நன்றி கூறினார்.

இதில் சங்கத்தின் மாநில துணைத் தலைவர்கள் கே.உலகநாதன் முன் எம்எல்ஏ, சி.எம்.துளசிமணி, துணைச் செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் சிவ.சூரியன், தேசியக் குழு உறுப்பினர்கள் அ.பன்னீர்செல்வம், மு.மாதவன் மற்றும் தோழர் அ.பாஸ்கர், ஆர்.ராமச்சந்திரன். பி.பழனி மற்றும் மாநிலக் குழு உறுப்பினர்கள் பங்கு கொண்டது சிறப்பாக அமைந்தது.

**திருவள்ளூர் மாவட்ட முன்னாள் செயலாளர்**

## பா.ஹரிஹரன் நினைவு நாளில் அஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்ட முன்னாள் செயலாளர் பா.ஹரிஹரன் அவர்களின் 14வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி அம்பத்தூரில், பகுதிச் செயலாளர் இரா. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் கோவை செல்வராஜ் கட்சிக் கொடி ஏற்றி புகழஞ்சலி செலுத்தினார். இதில் மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளர் ப. மாரியப்பன், கட்டிடச் சங்க மாநிலச் செயலாளர் இரா.துரைசாமி, மாநிலப் பொருளாளர் இரா.முருகன், ஏ.லோகேஷ், கோபிநாதன், ரவிச்சந்திரன், இம்ரான், சிவா, கணேசன், பெருமாள், அருணாச்சலம் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**கல்வராயன்மலை பழங்குடி இன மக்களின்**

## அடிப்படைத் தேவைகளை காற்றில் பறக்க விட்ட அவலம்

கல்வராயன்மலை பழங்குடி இன மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து உத்தரவிட்டது. அதனை காற்றில் பறக்க விட்டு அலட்சியம் காட்டி இதுவரை கள்ளக்குறிச்சி அரசு செய்து தரவில்லை என மலை கிராம மக்கள் அவலக் குரல் எழுப்பி வருகின்றனர். இனிமேலாவது கண்டு கொள்வார்களா அரசு அதிகாரிகள்?



கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை 1095 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இங்கு மா, பலா, வாழை, கடுக்காய், வரகு, சாமை, திணை, நெல், மரவள்ளி மொச்சை மற்றும் தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்து வருகின்றனர். உபதொழிலாக ஆடு, மாடு, கால்நடைகள் வளர்ப்பதும், மேலும் வருடத்திற்கு 6 மாதம் திருவிழா காலங்களில் வெளியூர்களுக்குச் சென்று கிராமிய கலை தெருக்கூத்து கலைஞர்களாக நடிக்கின்றனர்.

இந்நிலையில் 2019 ம் ஆண்டு மலை கிராம பழங்குடி இன மக்களின் மேம்பாட்டுக்காகவும், நிர்வாக வசதிக்காகவும் கல்வராயன் மலையை புதிய வட்டமாகத் தோற்றுவித்தனர். வெள்ளிமலை, எழுத்தூர், எட்டரப்பட்டி, ஆரம்பூண்டி நாரணம்பட்டி, விளாம்பட்டி, புதூர், உப்பூர், மேல்பரிகம், முண்டியூர், தொரடிப்பட்டு, கொடுந்துறை, ஈச்சங்காடு, கொட்டபுத்தூர், பாச்சேரி, குடமாத்தி, சின்னதிருப்பதி, மொட்டையனூர் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன.

இவர்கள் முதன்மையானதாகக் கொண்டுள்ள விவசாயத்தை முழுமையாகச் செய்ய விடாமல் தடுக்க வனத்துறைச் சட்டம் காரணமாக உள்ளது. மேலும் விவசாய விளைபொருட்களைக் கொண்டு செல்வதற்குச் சாலை வசதி, போக்குவரத்துக்கு பஸ் வசதி இல்லாமல் 15 கிலோமீட்டர் தூரம் நடந்தே செல்கிறார்கள். உடல்நிலை சரியில்லாதவர்களைத் தூளி கட்டி ஆஸ்பத்திரிகளுக்குத் தூக்கிச் செல்லும் அவல நிலை இன்றும் தொடர்கிறது, கல்வராயன் மலையில் வசிக்கும் பழங்குடி மக்களின் வாழ்க்கை நிலையினை உணர்ந்த சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் தாமாக முன்வந்து உற்பத்தி செய்யும் விவசாய விளை பொருட்களைக் கொள்முதல் செய்யவும், வாழ்வாதாரத்திற்கு தேவையான தொழிற்கூடங்கள் நிறுவுவதும், வெளிமாநிலங்களுக்கு வேலை தேடிச் சென்று கொத்தடிமைகளாக வாழ்வதைத் தடுத்து வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தி உள்ளூரிலேயே நிரந்தர வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது, நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பது, அனைத்து கிராமங்களுக்கும் இணைப்பு தார்ச் சாலைகள் தரைப்பாலங்கள், ஆறு நீரோடைகளின் குறுக்கே மேம்பாலங்கள் அமைத்துப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திமினிபஸ்கள் இயக்கவும், வசிக்கும் தெருக்களில் மின்விளக்குகள், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி, கல்வி, மருத்துவம், சுகாதாரம், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போன்ற தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனாலும் இதுவரை அரசும் அதிகாரிகளும் செயல்படுத்தாததால் தாகம் தீர்க்க தண்ணீர்கூடக் கிடைக்காமல் பஞ்சத்தில் மலை கிராம மக்கள் அவலக் குரல்கள் எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே மாவட்ட நிர்வாகம் கல்வராயன் மலை பழங்குடியின மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இனிமேலாவது கவனம் செலுத்துவார்களா? என எதிர்பார்க்கின்றனர்.

# ஆர்எஸ்எஸ் பாசிசம் - பிஜேபி நவ பாசிசம்!

## சிபிஎம் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விளக்கம்

**மதுரையில் நடைபெற உள்ள மார்க்சிஸ்ட் கட்சியின் 24 ஆவது கட்சி பேராயம் குறித்து, அதன் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், 'சவுத் ஃபர்ஸ்ட்' என்ற இணைய இதழுக்கு விரிவாகப் பேட்டியளித்துள்ளார்.**



அதன் ஒரு பகுதி வருமாறு:

**கேள்வி:** உங்கள் கட்சியின் 24வது அகில இந்திய மாநாட்டு வரைவுத் தீர்மானத்தில், பிஜேபி ஒரு முழுமையான பாசிச சக்தி என்பதற்கு பதிலாக "நவ பாசிசப் பண்புகளை" கொண்டிருப்பதாக விவரித்துள்ளது. இது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் காங்கிரசுடன் முரண்படுகிறது. அவை பிஜேபியை வெளிப்படையாகப் பாசிசம் என்கின்றன.

மார்க்ஸிஸ்ட் கட்சியும், பிஜேபியை பாசிசவாதி என்று அழைத்தது. இப்போது ஏன் இந்த நிலைப்பாட்டில் மாற்றம்?

**பதில்:** பாசிசம் பற்றி நாம் நினைக்கும் போது, முதலில் நினைவுக்கு வரும் பெயர்கள் ஹிட்லர் மற்றும் முசோலினி, அவர்களின் கொள்கைகள் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சித்தாந்தத்தை வரையறுத்தன. வரலாறு நமக்குக் கற்றுக் கொடுத்தது இதுதான்.

பிஜேபி இதேபோன்ற அணுகுமுறையைப் பின்பற்றுகிறதா? இல்லை. இங்கு வதை முகாம்கள் இல்லை, ஹிட்லர் போன்ற ஒரு குறிப்பிட்ட இனத்தை முறையாக அழிப்பது இல்லை, ஜனநாயக இயக்கங்களை முற்றிலுமாக அடக்குவது இல்லை, அல்லது மற்ற அனைத்து அரசியல் சக்திகளையும் ஒழிப்பது இல்லை. எனவே இது ஒரே மாதிரி அல்ல.

அதனால்தான் நாங்கள் "நவபாசிசம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். இன்றைய பாஜகவின் நடவடிக்கைகளை 1930களில் ஹிட்லர் மற்றும் முசோலினியின் செயல்களுடன் நேரடியாக ஒப்பிட முடியாது. இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இதனால்தான் அதை ஒரு பாசிச ஆட்சி என்று நேரடியாக அறிவிப்பதற்குப் பதிலாக, நவபாசிசம் என்று அழைக்கிறோம்.

கண்ணூரில் நடைபெற்ற 23வது அகில இந்திய மாநாட்டில் கூட, நாங்கள் அரசாங்கத்தை பாசிச போக்குகளைக் கொண்ட ஒன்றாக வகைப்படுத்தினோம், ஆனால் அதை ஒரு முழுமையான பாசிச ஆட்சியென்று ஒருபோதும் அறிவிக்கவில்லை. இருப்பினும், சிபிஐ(எம்எல்) போன்ற கட்சிகள் இதை "இந்தியபண்பு பாசிசம்" என்றும், சிபிஐ அதை ஒரு பாசிச அரசு என்றும் நேரடியாக அழைக்கிறது. அதுதான் அதன் நிலைப்பாடு.

வரலாற்று ரீதியாக, ஒவ்வொரு இடதுசாரிக் கட்சியும் அரசாங்கத்தின் வர்க்கத் தன்மை மற்றும் பண்புகள் குறித்து வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தன. இது ஒரு புதிய நிகழ்வு அல்ல. இருப்பினும், இந்த வேறுபாடுகள் இடதுசாரி ஒற்றுமையை பலவீனப்படுத்துவதில்லை.

அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகளை எதிர்ப்பதிலும், பெருநிறுவனங்களுக்கு ஆதரவான புதிய தாராளமயக் கொள்கைகளை எதிர்ப்பதிலும், மாற்றுக் கொள்கைகளை வகுப்பதிலும், அவற்றைச் செயல்படுத்துவதிலும், அவற்றுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதிலும் இடதுசாரிகள் ஒற்றுமையாகவே உள்ளனர். அரசாங்கத்தின் தன்மை குறித்த மாறுபட்ட கருத்துக்கள் இடதுசாரி ஒற்றுமையை எந்த வகையிலும் பாதிக்கும் என்று நாங்கள் நம்பவில்லை.

**கேள்வி:** உங்கள் தர்க்கத்தின்படி, நீங்கள் ஆர்.எஸ்.எஸ்.சை ஒரு பாசிச அமைப்பு என்று வகைப்படுத்துகிறீர்கள், ஆனால் அதன் அரசியல் முகத்தை "நவபாசிஸ்ட்" என்று விவரிக்கிறீர்கள். இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்:** இன்றைய ஆளும் கட்சி அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் பிரிவு. இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாசிச பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், நான் முன்பு குறிப்பிட்டது போல், அவர்கள் ஹிட்லரும் முசோலினியும் அந்தக் காலத்தில் செய்தது போல் செயல்படவில்லை. நவதாராளவாதக் கொள்கைகள் மூலம், அவர்கள் விவசாயிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக நிலத்தை அபகரித்து, கிராமப்புறங்களில் வேலையின்மை பிரச்சினைகளை அதிகரிக்கின்றனர். அவர்கள் பல்வேறு அரசியலமைப்புக்கு முரணான செயல்களில் ஈடுபட்டு, நிறுவப்பட்ட கொள்கைகளை புறக்கணித்து, அவர்கள் விரும்பியபடி கொள்கைகளை செயல்படுத்துகின்றனர். அவர்கள் அதிகாரத்தில் இருப்பதால், அவர்கள் அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இருப்பினும், பாஜக இந்த கட்டுப்பாடுகளை நடைமுறையில் கடைப்பிடிப்பதில்லை. இதுதான் முக்கிய வேறுபாடு.

**கே:** அப்படியானால் உண்மையில் என்ன வித்தியாசம்? ஆர்எஸ்எஸ் ஏன் பாசிசமாகக் கருதப்படுகிறது?

**பதில்:** பாஜக, ஆர்எஸ்எஸ் தலைமையிலான ஒரு கட்சி, ஆனால் ஆர்எஸ்எஸ் தானே நேரடியாக அதிகாரத்தில் இல்லை.

**கேள்வி:** அப்படியானால், பாஜக நவ பாசிசமாக இருக்கும்போது ஆர்எஸ்எஸ் பாசிசமாக இருக்கிறதா?

**பதில்:** இல்லை, நாங்கள் ஆர்எஸ்எஸ்ஐயும் வெளிப்படையாக பாசிசவாதி என்று அழைக்கவில்லை.

**கேள்வி:** ஆனால் உங்கள் வரைவுத் தீர்மானத்தில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது, இல்லையா?

**பதில்:** ஆர்எஸ்எஸ் பாசிச அமைப்பு என்று நாங்கள் எங்கே குறிப்பாகக் கூறியிருக்கிறோம்?

**கேள்வி:** நீங்கள் ஆர்எஸ்எஸ்ஸை பாசிசமாகவும் பாஜகவை நவபாசிசமாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள், இல்லையா?

**பதில்:** பாஜகவை வழிநடத்தும் அமைப்பு பாசிசமாக இல்லாவிட்டால், பாஜகவை எவ்வாறு பாசிசமாக கருத முடியும்?

**கேள்வி:** இந்த நிலைப்பாடு, கேரளா மற்றும் பிற மாநிலங்களில் பாஜக மீது மென்மையான நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதாக சிபிஐ(எம்) கட்சியை விமர்சனத்திற்கு உள்ளாக்கவில்லையா?

**பதில்:** களத்திலும் சித்தாந்த ரீதியாகவும் பாஜகவை எங்களை விட வலுவாக எதிர்க்கும் ஒரு அமைப்பின் பெயரைக் கூறுங்கள். சிறுபான்மையினருக்கு எதிரான அவர்களின் நடவடிக்கைகள், வகுப்புவாத கலவரங்களில் அவர்கள் ஈடுபடுதல் அல்லது பொதுமக்களிடையே வெறுப்பு அரசியலைப் பரப்பும் முயற்சி என எதுவாக இருந்தாலும், நாங்கள் சமரசமற்ற போராட்டத்தில் முன்னணியில் இருந்துள்ளோம். நடைமுறையிலும் சித்தாந்தத்திலும் பிஜேபியை எதிர்ப்பதில், எங்களை மிஞ்சுவது ஒரு புறம் இருக்கட்டும், எங்களுக்கு இணையாக செயல்படும் ஒரு கட்சியும் இல்லை என்பதை நான் உறுதியோடு சொல்ல முடியும்.

## நாகப் பாம்பு கொடிய விஷப்பாம்பு

இதை "நல்ல" பாம்பு என்றும் அழைப்பது உண்டு.

அதன் பெயரை மாற்றி அழைப்பதால் அதன் கொடும் விஷத்தின் வீரியத்தில் இம்மியும் குறையப் போவதில்லை.

அது புற்றுக்குள் பதுங்கி இருக்கிறது, தனது கொடிய உருவத்தை முழுமையாக வெளிக்காட்டவில்லை என்றாலும் அதைக் கண்ட மாத்திரத்தில் அடையாளம் கண்டு கொள்பவனே அறிவுடையவன் ஆவான்.

அது தனது விசப்பல்லை மட்டுமே லேசாக வெளிக்காட்டிக் கொண்டு இருக்கிறது ஆகவே அது விஷப்பாம்பு ஆகாது என்று பேசினால் கடிபட்டு இரத்தம் உறைந்து விசம் மண்டைக்கு ஏறிச் செத்துப் போவது சர்வ நிச்சயம்.

இது ஒன்றும் செய்யாது என்று சொல்லிக் கொண்டு இருந்தால், நம்மோடு கூட இருப்பவர்களையும் சேர்த்தே பலி கொடுப்போம்.

**சுந்தர சோழன் முகநூல் பதிவு**

## பாசிசம் பாயாசம்



இட்டுக் கட்டிய கதைகளை மெய்யென ஊதிப் பெருக்க வைத்தும்; அண்டை வீட்டானை ஜன்ம விரோதியாய்க் காட்டிக் காட்டி உசுப்பேற்றியும்; மத வெறி நெருப்பை எங்கும் பற்ற வைத்துக் கொண்டே இருக்கும் சங்கித்தனத்தைப் பாசிசம் என்று சொல்லாமல் பாயாசம் என்றா சொல்ல முடியும்?

**சு.பொ.அகத்தியலிங்கம்**

## பிஜேபியை பாசிசம் என்று சொல்வதில் தயக்கம் ஏன்?

### பினாய் விஸ்வம் கேள்வி!



இந்தியாவில் பாசிசத்தை, பாசிசம் என்று அழைப்பது சிபிஐ(எம்) உள்ளிட்ட கட்சிகள் தயக்கம் காட்டுவதை சிபிஐ மாநில செயலாளர் பினாய் விஸ்வம் விமர்சித்துள்ளார்.

'பாசிசம் என்பது வதை முகாம்கள் மற்றும் எரிவாயு அறைகளுடன் மட்டும் தொடர்புடையதாக இருக்க முடியாது. மாறாக பாசிசத்தின் நவீன அறிகுறிகளில் கும்பல் படுகொலைகள், மத வெறுப்பு, வழிபாட்டுத் தலங்களை அழித்தல் மற்றும் பாலியல் வன்முறை ஆகியவை அடங்கும்.' என்றார் அவர்

மோடி அரசாங்கத்தை பாசிச, நவ பாசிச அல்லது நவபாசிச போக்குகளைக் கொண்ட, என்று பகுத்தறிவது குறித்து சிபிஐ(எம்) கட்சிக்குள் நடந்து வரும் உள் விவாதத்தின் மத்தியில் விஸ்வத்தின் கருத்துக்கள் வந்துள்ளன.

பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு பாசிச அல்லது நவபாசிசமாக கருதப்படவில்லை என்றாலும், அது "நவ பாசிச பண்புகள்" கொண்ட "அதிகப்படியான இந்துத்துவா கார்ப்பரேட் ஆட்சி" என்று சிபிஐ(எம்) முன்பு ஒரு குறிப்பில் தெளிவுபடுத்தியிருந்தது.

சிபிஐ மற்றும் சிபிஐ(எம்) இடையேயான உறவு

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தை விஸ்வம் மீண்டும் உறுதிப்படுத்தினார். முழு சுதந்திரத்துக்காக அது, இந்தியாவிலேயே முதல்முறையாக அழைப்பு விடுத்ததையும் மற்றும் அதன் அமைப்பு நிலை கட்டமைப்பின் பரிணாம வளர்ச்சியையும் நினைவு கூர்ந்தார்.

கேரளாவில் சிபிஐ மற்றும் சிபிஐ(எம்) இடையே வலுவான உறவைப் பேணுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார், இடது ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்) அதன் மதிப்புகளை நிலைநிறுத்தி இந்தியாவில் மாற்று அரசியலுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சிபிஐ(எம்)க்குள் விவாதம் தொடர்கையில், இந்தியாவில் தற்போதைய அரசியல் சூழலை எவ்வாறு வகைப்படுத்துவது என்பது குறித்து கட்சித் தலைவர்களிடையே உள்ள மாறுபட்ட கருத்துக்களை இது எடுத்துக்காட்டுகிறது.

**'சவுத் ஃபர்ஸ்ட்' இணைய இதழிலிருந்து**

கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமான, 4 தொழிலாளர் சட்ட தொகுப்புகளை அமலாக்கத் துடிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து

# மே 20ல் அகில இந்திய பொது வேலை நிறுத்தம்

## மத்திய தொழிற்சங்கங்கள் அழைப்பு

# பாலியல் குற்றங்களுக்கு அதிகபட்சத் தண்டனை வழங்க வேண்டும்

## மாதர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்

### கும்பகோணம்

இந்திய மாதர் தேசியச் சம்மேளனத்தின் சார்பில், பாலியல் குற்றங்களை இரும்புக் கரம் கொண்டு தடுத்து நிறுத்த வேண்டும், பாலியல் குற்ற வழக்குகளை விரைந்து நடத்தி, குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்பதை வலியுறுத்தி கும்பகோணம் ஏஐடியுசி தொழிற்சங்க அலுவலகத்திலிருந்து மாதர் பேரணி புறப்பட்டு, கும்பகோணம் தலைமை அஞ்சலகம் முன்பு, மாவட்டச் செயலாளர் பா.சரண்யா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் சிறப்புரையாற்றினார். இதில் நிர்வாகிகள் பி.தாமரைச்செல்வி, ஜெ.சந்திரா, எம்.ராஜலக்ஷ்மி, எம்.பிரபா, எஸ்.பரிமளா, எம்.ரேணுகா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். மாநகரச் செயலாளர் எம்.கவிதா நன்றி கூறினார்.



கும்பகோணம்



விருதுநகர்

### விருதுநகர்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் மாதர் சம்மேளனத்தின் மாவட்டச் செயலாளர் பாண்டிச்செல்வி தலைமையில், வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணி பெரியசாமி முன்னிலையில், சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி ஆகியோர் பேசினார்கள். மாதர் சங்க மாவட்டப் பொருளாளர் முத்துலட்சுமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### குமரி

செண்பகராமன்புதூர் பேருந்து நிலையம் அருகே, கிளைச் செயலாளர் ஐ.தங்கம், செல்வி, ஜெயா, சந்திரா ஆகியோர் தலைமையில், மாவட்டச் செயலாளர் ஆர்.செல்வராணி ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் சோபனா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வே.அருள்குமார், சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.அனில்குமார், சிபிஐ தோவாளை தாலுகா செயலாளர் எஸ். கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசினர். அகில இந்திய முற்போக்குப் பேரவை மாநிலத் துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

### திருப்பூர் புறநகர்

திருப்பூர் புறநகர் மாவட்டக் குழு சார்பில், திருமுருகன் பூண்டி அம்மாபாளையத்தில், நகர்மன்ற துணைத் தலைவரும், மாதர் சம்மேளன மாவட்ட துணைத் தலைவருமான பி.ராஜேஸ்வரி தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர் பி.நதியா, மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.பேபி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.லீலாவதி, எஸ்.கோகிலா, என்.சாவித்திரி, வாசுகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


குமரி



திருப்பூர் புறநகர்

### தலித் மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக

# தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மார்ச் 22 அன்று ஆறு மையங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலக் குழு கூட்டம் 14.03.2025 அன்று, விழுப்புரம் மாவட்டக் கட்சி அலுவலகத்தில் ஜி.லதா, வழக்கறிஞர் முருகன், காஞ்சிபுரம் எஸ்.ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநிலப் பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் வேலை அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசினார். அகில இந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியத் தலைவர் அ.ராமமூர்த்தி தேசியக் குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். தேசியச் செயலாளர் த.லெனின் தீர்மானங்களை விளக்கிப் பேசினார். மாநிலச் செயலாளர்கள் அ.அசரப் அலி எதிர்கால கடமைகள் குறித்தும், லி.உதயகுமார் அமைப்பு நிலை குறித்தும், எஸ்.கே.சிவா ஆதிதிராவிடர் நல மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் பேசினர். கட்சியின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் அ.சௌரிராஜன் வாழ்த்துரை வழங்கினார். மாநிலப் பொருளாளர் இரா.மோ.சந்தோஷ் குமார், மத்திய மண்டலப் பொறுப்பாளர் கல்யாண சுந்தரம் உள்ளிட்டு 55 தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மார்ச் 22 அன்று 6 மையங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி மாணவர் தேவேந்திர ராஜா மீது தாக்குதல் நடத்திய சாதிவெறி சக்திகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, வரும் மார்ச் 22 அன்று தமிழ்நாடு முழுவதும் 6 மையங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது.

கபடிப் போட்டியில் தேவேந்திர ராஜா பங்கேற்ற அணி வெற்றி பெற்றது என்ற காரணத்திற்காக, தேவேந்திர ராஜா கடந்த 10 ஆம் தேதி பள்ளிக்குப் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த போது, பொதுமக்கள் மத்தியில் கீழே தள்ளி, சரமாரியாகத் தலையிலும் கையிலும் வெட்டியுள்ளது ஆதிக்கச் சாதிவெறிக் கும்பல். இந்தத் தாக்குதலில் கை விரல்கள் துண்டிக்கப்பட்டு, கொடும் காயத்துடன் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.






விளையாட்டில் வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளாமல், தோல்வியுற்ற இளைஞர்களை, கீழ்சாதிகாரனிடம் தோற்று விட்டாயே என உசுப்பி ஏற்றி விட்டு, அவனைச் சமூகத்தில் சாதிவெறியனாக மாற்றும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது ஒரு கும்பல். இதைப்பார்த்து இந்துத்துவச் சக்திகள் குதூகலித்து வருகின்றன. இது தமிழ்நாட்டின் பண்பாடு மற்றும் சமத்துவ விழுமியங்களுக்கு நேர் எதிரானது ஆகும். எனவே தமிழ்நாடு முழுவதும் இருக்கும் முற்போக்கு, ஜனநாயக, இடதுசாரி சக்திகள் ஒருங்கிணைந்து இந்த முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிய, தொடர்ந்து போராட முன் வர வேண்டும் என இம்மாநிலக் குழு கேட்டுக் கொள்கிறது.

சமூக நீதியைக் காக்கும் அரசு என்ற அடிப்படையில் இட ஒதுக்கீடு, இந்தித் திணிப்பு போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துவதோடு. சாதி ஒழிப்பின் அவசியத்தை உணர்த்தும் விதத்தில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு, சமூகநீதி கருத்துகள் மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். இதன் மூலமே சாதியச் சிந்தனையை அடுத்த தலைமுறையிடம் வேரூன்றுவதைத் தடுக்க இயலும்.

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான விழிப்புணர்வுக் குழு மாதந்தோறும் கூட்டுக!

பட்டியலின மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்காணிக்கும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான விழிப்புணர்வு குழு மாதந்தோறும் கூட்டப்பட்டு, சாதிய மோதலுக்கான பதற்றம் உள்ள பகுதிகள் குறித்து விவாதிப்பதும், அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க, கூட்டங்களை மாதம்தோறும் நடத்திட வேண்டும். மேலும் முதல்வர் தலைமையிலான மாநில அளவிலான குழுவினை ஆண்டுக்கு மூன்று முறை கூட்டி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மார்ச் 22ல் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்போர்:

- சென்னையில் ஜி.சுப்பிரமணி, இரா.மோ.சந்தோஷ் குமார், எஸ்.ராமச்சந்திரன், எஸ்.பாஸ்கர் தலைமையில், மு.வீரபாண்டியன், எஸ்.கே.சிவா, லி.உதயகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றவுள்ளனர்.
- மதுரையில் அ.மூர்த்தி, எஸ்.பழனிக்குமார், மாரி தலைமையில், பொ.லிங்கம் எக்ஸ் எம்.பி, வழக்கறிஞர் கிருஷ்ணன் ஆகியோர் கண்டன உரையாற்றவுள்ளனர்.
- வேலூரில் ஜி.லதா, எம்.வெங்கடேசன் தலைமையில், ஏஐஒய்எப் மாநிலச் செயலாளர் க.பாரதி, எல்.மணி ஆகியோர் கண்டன உரையாற்றவுள்ளனர்.
- நாமக்கலில் எஸ்.ராமகிருஷ்ணன், மணிகண்டன், அ.கு.பரமேஸ்வரன் அ.ராசன், தங்கவேல் தலைமையில், த.லெனின், அ.அசரப்அலி ஆகியோர் கண்டன உரையாற்றவுள்ளனர்.
- தஞ்சாவூரில் கல்யாண சுந்தரம், வி.ஜெ. ஜெகதீசன், லாரன்ஸ், பி.செல்வராஜ் தலைமையில், வழக்கறிஞர் கிருஷ்ணன், கா.மாரிமுத்து எம்எல்ஏ ஆகியோர் கண்டன உரையாற்றவுள்ளனர்.
- தூத்துக்குடியில் பொ.சுகுமாரன், பி.முத்துட்சுமி, பாபு ஆகியோர் தலைமையில், மு.வீரபாண்டியன் கண்டன உரையாற்றவுள்ளனர்.

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# கிரீஸ் நாட்டில் மக்கள் எழுச்சி



கிரீஸ் நாட்டில் நான்கரை லட்சம் மக்கள் பங்கேற்ற பெரும் போராட்டமும் பொது வேலைநிறுத்தமும் எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.

கிரீஸ் நாட்டின் டெம்ப்பி நகரத்தில், நின்றுகொண்டிருந்த சரக்கு ரயிலின் மீது பயணிகள் ரயில் மோதிய போது தீப்பிழம்புகள் வெடித்து சிதறியதில் அந்தப் பகுதியே சாம்பலாயின. 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தத் தீவிபத்துக்கு கட்டமைப்பு குறைபாடு மற்றும் மனிதத் தவறுகளே காரணம் என்று அரசு விளக்கம் அளித்தது. இதனை கிரீஸ் நாட்டு மக்கள் ஏற்க மறுத்துவிட்டனர்.

சரக்கு ரயிலில் தடை செய்யப்பட்ட ரசாயனங்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் என்றும் அதற்கு அரசும் உடந்தையாக இருக்கிறது என்றும் மக்கள் குற்றம்சாட்டினர். இந்தத் தீயில் சிக்கி 57 பேர் எரிந்து சாம்பலாயினர். 85 பேர் படுகாயமடைந்தனர். இரண்டு ஆண்டுகளாகியும் நீதி கிடைக்காததால் ஆத்திரமடைந்த கிரீஸ் நாட்டு மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏதென்சின் சின்டாக்மா சதுக்கம் நிரம்பி வழிந்தது. சதுக்கத்திற்கு வெளியே இரு திசைகளிலும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு மக்கள் திரண்டிருந்து போராட்டத்தில் பங்கேற்றனர். கொலைகார அரசு ஒழிக!, தனியார் மயம் மக்களைக் கொல்லும்! போன்ற வாசகங்கள் இடம்பெற்ற பதாகைகளை மக்களே தயாரித்து எடுத்து வந்திருந்தனர். ஏறத்தாழ நான்கரை லட்சம் பேர் பங்கேற்றிருப்பார்கள் என்று கிரீஸ் நாட்டு முன்னணிப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. இந்தப் போராட்டத்தை சமூக சுனாமி என அந்நாட்டுப் பத்திரிகைகள் வர்ணித்துள்ளன.

கிரீஸ் பொதுத்துறைகளின் தொழிற்சங்கக் கூட்டமைப்பும், தனியார் நிறுவனங்களைச் சார்ந்த கிரீஸ் தொழிலாளர்கள் கூட்டமைப்பும் இந்தப் போராட்டம் மற்றும் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. அந்நாட்டுக் காவல்துறையின் அடக்குமுறைகள், கண்ணீர் புகை வீச்சுகள், தடுப்புகள் என அனைத்தையும் மீறி ஏதென்ஸ் உட்பட 252 நகரங்களில் இந்தப் பொதுவேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டமும் பெரும் எழுச்சியுடன் பிப்ரவரி 28 ஆம் தேதி நடைபெற்றது.

# செர்பியாவை திணறவைத்த மாணவர்கள் போராட்டம்



செர்பியாவில் அரசுக்கு எதிராக மூன்று லட்சம் பேர் பங்கேற்ற மாபெரும் போராட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. செர்பிய தலைநகர் பெல்கிரேடில் ஆட்சியாளர்களின் ஊழலுக்கும் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கும் எதிராக மார்ச் 15 ஆம் தேதி மாணவர்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து, மாணவர்களுடன் தொழிலாளர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். செர்பிய ஆட்சியாளர்களை அசைத்துப் பார்த்த இந்த பெரும் எழுச்சியில் ஏறத்தாழ மூன்று லட்சம் பங்கேற்றனர்.

## பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ மகன் திருமணத்தில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.50 ஆயிரம் வழங்கினார்



விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன்கோவிலில், சிபிஐ மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ மகன் பொ.கணேஷ்குமார் – சு.நவ்நிதா திருமணம் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி தலைமையில், வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி முன்னிலையில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் திருமணத்தை நடத்தி வைத்தார்.

மணமக்களை வாழ்த்தி மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் பி.லிங்கம், விதொச மாநிலச் செயலாளர் அ.பாஸ்கர், தகஇபெ மாநிலச் செயலாளர் மருத்துவர் த.அறம், சிபிஎம் மாநிலச் செயற்குழு உறுப்பினர் அர்ஜுனன், மாவட்டச் செயலாளர் குருசாமி, சிபிஐ மாநிலக் குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்ட துணைச் செயலாளர் சமுத்திரம், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், ஏஐடியுசி வி.இரவி, நடராஜன், வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணி பெரியசாமி, திருவில்லிபுத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் மல்லி கு.ஆறுமுகம் மற்றும் சர்வகட்சி தலைவர்கள் நேரில் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனிடம் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.50 ஆயிரம் வழங்கினார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.